விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 31 சனிக்கிழமை (14.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 177

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# புலிகள் மீதான தடையை ஆராய குழு நியமனம்

## இந்திய அரசாங்கம் நியமித்தது

**(கொழும்பு) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் விதித்துள்ள தடை சரியா என்பதை விசாரிக்க தீர்ப்பாயம் அமைக்க மத்திய அரசு உத்தரவு பிறப்பித்தது. இந்த தீர்ப்பாயத்தினை விசாரிக்க நீதிபதி ஜி.பி.மித்தல் தலைமையில் சட்டவிரோத செயல்கள் தடுப்புத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு அதற்கான உத்தரவு இந்திய மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக இந்திய மத்திய உள்துறை இணைச் செயலாளர் ராகேஷ் சிங் கடந்த ஜூன் 5ஆம் திகதி வெளியிட்ட அரசாரணை, மத்திய அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது, சட்டவிரோத செயல்கள் தடுப்பு சட்டம் 5 (1) பிரிவின்படி டெல்லி உயர நீதிமன்ற அமர்வு நீதிபதி ஜி.பி.மித்தல் தலைமையில் சட்டவிரோத செயல்கள் தடுப்பு தீர்ப்பாயம் அமைக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயககத்தை சட்டவிரோத அமைப்பு என்று அறிவிப்பதற்கு மத்திய அரசு தெரிவித்த காரணம் சரியானது தானா என்பதை அந்த அந்த தீர்ப் பாயம் விசாரிக்கும் என்று குறிப் பிடப் பட்டுள்ளது. தீவிரவாத இயக்கம் என்று கூறி ஒரு அமைப்புக்கு தடை விதிக்கப்பட்ட பிறகு அது சரியா என்பதை கண்டறிய இதுபோன்ற தர்ப்பாயம் அமைக்கப்படுவது வழக்கமான நடவடிக்கைதான்.

இதன்மூலம், தடையை விலக்க கோரும் வாய்ப்பு சம்மந்தப்பட்ட அமைப்புக்கோ, அதன் ஆதரவாளர்களுக்கோ வழங்கப்படுகிறது. முன்னதாக கடந்த மே 14 ஆம் திகதியிட்ட மத்திய அரசின் அரசிதழில் விடுதலைப் புலிகளுக்கு ஐந்தாண்டுகள் தடை விதிக்க மத்திய அரசு சில காரணங்களை கூறியிருந்தது.

அதில், விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்

20 ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைக் குழுவை அனுமதிக்க ஐ.நாவிலிருந்து அதிகாரிகள் வருகை

(ஜெனிவா)

ஐ.நாவின் விசாரணைக்குழுவை அனுமதிப்பது குறித்த அழுத்தங்களை பிரயோகிக்க, அமெரிக்காவில் இருந்தும் ஐக்கியநாடுகள் சபையின் உயர்மட்டத்தில் இருந்தும் உயரதிகாரிகள் இருவர் விரைவில் இலங்கைக்கான திடீர் பயணத்தை மேற கொண்டு கொழும்பில் தரையிறங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.





20 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையூடாக சென்னையை தாக்க பாகிஸ்தான் திட்டம்

(புதுடில்லி)

சென்னையில் பல முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்துவதற்கு பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளமை வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

சென்னை துறைமுகம், சென்னை சென்றல் ரயில் நிலையம், சென்னை விமான நிலையம்மற்றும் பெங்களூர் நகரம் ஆகிய இடங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாக எக்னமிக்ஸ் ரைம் இதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுப் பிரிவின் ஆதரவுடன் இயங்கும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு இலங்கையில் உள்ள தனது பிரதிநிதிகள் மூலம் பாகிஸ்தான் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதாக சென்னையில் ஏப்ரல் இறுதி வாரத்தில் கைது செய்யப்பட்ட இலங்கையரான மொகமட்ஸாகிர்ஹுசைன என்ற சந்தேக நபர் இது தொடர்பான பரபரப்புத் தகவல்களை வெளியிட்டிருக்கின்றார் என்று அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸாகிர் ஹுசைன் கொடுத்த வாக்குமூலத்தின்படி, பெங்களூர் இலத்திரனியல் நகரம், தமிழ்நாடு கூடங்குளம் அணுமின் நிலையம் ஆகியவையும் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த தாக்குதல் நடவடிக்கைக்கான

20 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையில் இருந்து ஐ.நாவுக்கு முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித் துள்ளது.

அமைதியாக ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியன தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி மாய்னா கியாய் இதனைத் தெரி வித்துள்ளார்.

அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமை மறுக்கப் பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைக் கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள் ளார்.

உதாரணமாக உலகின் பல நாடுகளில் பெண்கள் தங்களது உரிமைகளை உறுதி செய்து கொள்ள மேற்கொள்ளும் போராட் டங்கள் முடக்கப்படுவதாக முறைப் பாடு செய்

20 ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் போர்க்குற்றங்களை விசாரிக்கவும் ஐ.நா. உதவ வேண்டும்

### ஐ.தே.க. ஆலோசனை

(ஜெனிவா)

இலங்கை அரசாங்கம்- கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் அல்லது செல்வராசா பத்மநாதன் மற்றும் கருணா எனப்படும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது குற்ற விசாரணைகளை மேற்கொண்டு தமது பொறுப்புக் கூறலை ஆரம்பிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை கூறியுள்ளதாக கொழும்பில் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த இரண்டு பேரும் இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் கொலை மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கொலை முயற்சி ஆகியவற்றுடன் தொடர்பு பட்டவர்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான வாய்ப்பை ஐ.நாவுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கம் ஐககிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைப்பதற்கான சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஜே.வி.பியின் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு சுயாதீன விசாரணைகள் நடதத்தப்பட வேண்டுமென தெரிவித்து ஜே.வி.பி. யோசனைத்திட்டமொன்றை பாராளுமன்றில் கையளித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைப் பேரவையினால்

19 ஆம் பக்கம் பார்க்க....

## கடத்தப்பட்ட மீனவர்கள் மீட்பு

(கொழும்பு)

இலங்கைவெளிவிவகார அமைச்சு மறறும் நைரோபியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் உதவியால் சோமாலிய கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட மாலுமிகள் இரண்டு பேர் நாடு திரும்பினர்.

கடந்த நவம்

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# படையினருடன் இணைந்து பொலிஸார் பயங்கரவாதத்திற்கு ஆட்சேர்க்கவில்லை

## யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்துடன் இணைந்து பொலிஸார் இராணுவ ஆட்சேர்ப்பில் ஈடுபட்டால் அது தவறில்லை.

நாம் இராணுவத்திற்கே ஆட்சேர்க்கின்றோம். பயங்கரவாதத்திற்கு ஆட்சேர்க்வில்லை என யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது யாழ்.மாவட்டத்திலுள்ள சில இடங்களில் இராணுவத்தோடு இணைந்து பொலிஸாரும் இராணுவ ஆட்சேர்ப்பில் ஈடுபடுகின்றனர்.

மேலும் வீதிகளில் செல்லுகின்ற இளைஞர்களின் பெயர் விபரங்கள் அடையாள அட்டை எண் என்பவற்றினையும் இராணுவத்தோடு சேர்ந்து பொலிஸாரும் பெற்றுக் கொள்கின்றனரே? என ஊடகவியலாளர் ஒருவரினால் கேள்வியெழுப்பப்பட்டது.

இக்கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவ ஆட்சேர்ப்பில் எம்மை ஈடுபடுமாறு இதுவரை (நேற்றுவரை) இராணுவம் கோரவில்லை.

ஆனால் இராணுவத்தோடு சேர்ந்து பொலிஸார் இராணுவ ஆட்சேர்பில் ஈடுபட்டால் அது தவறில்லை.

நாம் பயங்கரவாதத்திற்கு ஆட்சேர்க்கவில்லை. ஒரு நாட்டின் தேசிய படையான இராணுவத்திற்கே ஆட்சேர்க்கின்றோம் என்றார்.

சிவில் நிர்வாகம் பாதுகாப்பு அமைச்சோடு சேர்ந்து செயற்பட்டால் வடக்கில் மட்டும் மாறுபட்டநிலை ஏற்பட்டுவிடும் என கேட்ட போது அத்தியட்சகர் அதற்கு பதிலளிக்கவில்லை.

விசேட அதிரடிப் படையோடு சேர்ந்து பொலிஸார் செயற்படாமல் ஏன் இராணுவத்தோடு இணைந்து செயற்பட முனைகின்றீர்கள் என கேட்டபோது;

இங்கு இராணுவமே அதிகமாக உள்ளது. அதனால்தான் அவர்களோடு இணைந்து செயற்படுகின்றோம் என்றார். (எ-4)


## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை றோட்டில் பன்னையம்பதியில் (நி.பர. ஒன்று குளி 04) விஸ்தீரணமான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0774366704

(இ-7650)


## சடலமாக இளைஞன் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புதுமடம் தெற்கு மானிப்பாய் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சடலம் அதேயிடத்தினைச் சேர்ந்த பாஸ்கரன் ஜூட் ஜெனீஸ்ரன் (வயது 25) என அடையாளம் காணப்பட்டது.

நேற்றைய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரமான செய்தியில் இவரது பெயர் தவறுதலாக பிழையாக பிரசுரமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ-11)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

இல.84, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்திற்கு ஒரு வருட காலத்திற்கு சுத்தப்படுத்தல் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வியாபாரப் பெயர்கள் சட்டம் இல.4/1990 இனால் ஒன்றிணைக்கப்பட்ட வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 149) இன்படி பதிவு செய்த அல்லது வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றுடன் இணைக்கப்பட்டமைக்கான சான்றிதழ் (பகுதி 20 இன் பிரகாரம்) உள்ள நிறுவனங்கள் அல்லது தனிநபர் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 30.06.2014 மதியம் 12 மணிவரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் நிர்வாகக் கிளை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபாய் 500/- ஐ நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் உறையிலிடப்பட்டு அவ் உறையின் மேல் மூலையில் **சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு** என அடையாளமிடப்பட்டு 04.07.2014 பி.ப 2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ. இல.57, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடப்படலாம்.

விலைமனுக்கள் 04.07.2014 அன்று பி.ப 2.30 மணிக்குப் பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமூகமளிக்கலாம்.

சம்பள சபைகள் கட்டளைச்சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறையாத சம்பளம் ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்ற உத்தரவாதம் சேவை வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர் (சி-7649)


# வலி.வடக்கு மக்களை மீள்குடியமர்த்த எதிர்ப்பு

யாழ்.கோப்பாய் பிரதேச வளலாய் கிராமத்தில் இருந்த மக்கள் மீள்குடியேற்றப்படாத நிலையில் அந்த இடத்தில் வலி.வடக்கு மக்களை குடியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது.


எதிர்வரும் 16-ம் திகதி குறித்த கவனயீர்ப்பு போராட்டம் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 8 மணி தொடக்கம் 11 மணிவரையில் நடைபெறும். இதில் கட்சி பேதங்கள், அரசியல் பேதங்கள் கடந்து அனைத்துத் தரப்பினரும் கலந்துகொண்டு வளலாய் மக்களின் மீள்குடியேற்றத்திற்கான போராட்டத்தில் பங்குதாரிகளாக மாறவேண்டும் என தெரிவித்தள்ளார்.

இதேவேளை குறித்த வளலாய் கிராமத்தில், 2 கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றப்படாத நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் மேற்படிக் கிராமத்தில் அண்மைக்காலமாக காணிகள் துப்புரவு செய்யப்பட்டு, படையினரால் நிலங்கள் அளக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் மேற்படி துப்புரவு செய்யப்படும் பகுதியில் வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களை குடியேற்ற படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நிலத்திற்குச் சொந்தமான மக்கள் தங்கள் இடத்திற்குச் செல்லமுடியாமல் இருக்க, அந்த இடத்தில் மற்றொரு மக்களை குடியேற்றும் இராணுவத்தின் அராஜகப் போக்கினையும், சிண்டு முடியும் போக்கினையும் எதிர்த்தே இப் போராட்டத்தை தாம் நடத்தப் போவதாக மக்கள் தெரிவித்திருக்கின்றனர். (எ-11)

# இரண்டு மோ.சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயம்



(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு இளைஞர்கள் உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் இரண்டு மோட்டார் சைக்கிளும் படுசேதத்திற்குள்ளாகியிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

யாழ்.பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் பலாலி வீதியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் பலாலி வீதியில் பயணிக்க ஆரம்பித்தபோது மிகவும் வேகமாக யாழ்ப்பாணம் நோக்கி பலாலி வீதியில் வந்து கொண்டிருந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் நேற்று இரவு 9 மணியளவில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் யாழ். நாச்சிமார் கோவிலடியினைச் சேர்ந்த பலசரக்கு கடை வைத்திருப்பவரான கே.தங்கராஜா (வயது-62) மற்றும் யாழ்.குருநகர் பகுதியைச் சேர்ந்த எம். நிதர்ஷன் (வயது -20), ஆர்.வினோதன் (வயது-20) ஆகிய மூவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)


## Mobile Application Development (Android), Programming, Multimedia
## கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

Mobile Application Development(Android) கற்கைநெறி கொழும்பில் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றும் மென்பொருள் பொறியியலாளரினால் நடாத்தப்பட இருக்கின்றது. இன்று (10.00 am / 7.15 pm) நடக்கும் அறிமுக வகுப்பில் இலவசமாக கலந்துகொண்டு உங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளலாம்.
Multimedia, Programming வகுப்புகளுக்கான அறிமுக வகுப்புகளும இன்று நடைபெறுகின்றது. அலுவலர்களுக்கான இரவுநேர Programming, Web Development வகுப்புகளும் ஆரம்பிக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு :0777933338

MICRO DGITEL (C-7653)


## கண்ணீர் அஞ்சலி



செல்வநாயகம் மகாலிங்கம்

எமது பாடசாலை ஆசிரியர் செ.சிவஞானம் அவர்களின் அன்புச் சகோதரன் செல்வநாயகம் மகாலிங்கம் அவர்கள் 11.06.2014 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம், கிளி/கிளிநொச்சி ம.வி

(சி-7647)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக செயற்பாடுகளில் இராணுவம் தலையிடுவதில்லை

## இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

**(கொழும்பு) இராணுவம் உட்பட முப்படையினர் வடபகுதி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக சகல சந்தர்ப்பங்களிலும் ஒத்துழைப்பு வழங்குகின்றார்களே தவிர இடையூறுகள் விளைவிப்பதில்லை. இவ்வாறு கூறப்படும் செய்திகளில் எந்தவித உண்மையும் கிடையாது என இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடக மையத்தின் பணிப்பாளருமான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.**

பாதுகாப்புடன் தொடர்புடைய சமகால நடப்பு விவகாரங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு கொள்ளுப்பிட்டியிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடக மையத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் இராணுவத்தினரால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக கூறப்படும் செய்திகள் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தமது கல்வி உட்பட சகல நடவடிக்கைகளையும் சுதந்திரமாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாகவே அவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சுதந்திரமாக நடத்த முடிந்துள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

எனவே, இராணுவத்தினரால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது. அவ்வாறான குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுப்பதாக கூறினார்.

வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து பெற்று புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாம் வாழ்ந்து வரும் நாடுகளில் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கிலேயே இலங்கையில் பிரச்சினை உள்ளது என்று காண்பிக்க முயற்சிப்பதாகவும் வடக்கு, கிழக்கு. உட்பட நாட்டில தற்பொழுது சுமுகமான நிலைமை காணப்படுகின்ற போதிலும் தமது சுயலாபத்தை கருத்திற்கொண்டு இவர்கள் பல்வேறு பொய்யான தகவல்களை அவ்வப்போது வெளியிட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் தற்பொழுது அமைதியான சூழல் காணப்படுவதால் இலங்கை தொடர்பில் உண்மை நிலைமைகளை தமது தூதரங்கள் ஊடாக அறிந்த பல நாடுகள் அகதி அந்தஸ்து பெற்று வாழும் பலரை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளன.

இதனால்தமது சொகுசு வாழ்க்கை, தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை பாதிப்படையும் என்ற அச்சத்தின் காரணமாக வடக்கில் பெண்களுக்கு இராணுவத்தினரால் அச்சுறுத்தல்கள் உள்ளன என்றும் சுமுக நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் திட்டமிட்ட அடிப்படையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை கூறி வருகின்றனர் என்றார். (2)

## விவசாய விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

விவசாய அமைச்சும் தேசிய விவசாய வியாபாரசபையும் இணைந்து வருடாந்தம் நடத்தும் விவசாய விருது வழங்கும் நிகழ்ச்சித் திட்டத் திற்கமைவான விவசாய விருது-2014 இற்கான வெற்றியாளர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் நாடளாவிய ரீதியில் கோரப்பட்டுள்ளன என யாழ்ப்பாண பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) கி.சிறிபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் இவ்விருதிற்காக விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரிடம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தேசிய விவசாய வியாபாரசபை இல. 50, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அத்துடன் கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் விவசாய விருது -2014 எனக்குறிப்பிடப் பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மாவட்ட மட்டத்தில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான விருதுகள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள விருது வழங்கும் வைபவத்தில் வழங்கப்படவுள்ளது.

எனவே தகுதியுடையோர் இவ்விருதிற்காக விண்ணப்பிக்கும் படி அவர் கேட்டுள்ளார். (2)

# 18 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தல் பற்றி விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகளின் பின்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசியல் சாசனத்தில் சந்தர்ப்பம் உள்ளது. இதன அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கான உசிதமான திகதி ஒன்றை அறிவிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

கிரக நிலைகளுக்கு அமைவாக எப்போது தேர்தலினை நடத்தினால் வெற்றியீட்ட முடியும் என்பது குறித்து ஜனாதிபதி ஏற்கனவே ஜோதிட நிபுணர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாத நடுப்பகுதியளவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, 18 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்த முடியாது என ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் இரண்டாம் தவணைக் காலத்தில் மட்டுமே, பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகளின் பின்னர் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க முடியும்.

எனினும் 18ஆவது திருத்தச் சட்டத்தில் மூன்றாம் தவணைக்காக எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுப்பது என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை.

அத்துடன் குறித்த திருத்தச் சட்டத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்ததாக கருதமுடியாது.

மக்கள் ஆணையினால் தெரிவு செய்யப்பட்ட மூன்றில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கவில்லை.

எதிர்க்கட்சியிலிருந்து தாவியவர்களை உள்ளடக்கியே அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பலம் காணப்படுகின்றது. இதனை மக்களின் ஆணையாக கருதிவிட முடியாது.

18ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான கால வரையறைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை.

இவ்வாறான ஓர் நிலைமையில் ஜனாதிபதியினால் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இராசி பலன்

**14.06.2014**

**(வைகாசி 31, சனிக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு**

**பிரதமை முற்பகல் 8.09 மணிவரை**

**மூலம் பிற்பகல் 12.29 மணிவரை**

**இராகுகாலம் 8.53-10.23 மணிவரை**

**சுபநேரம் 2.53-4.23 மணிவரை**

**வளவன்**

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்,பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**மேடம்:** தடைகள் அகன்று தனவரவுகள் பெருகும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்,பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** அடுத்தவர் விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளைத் தவிர்ப்பது நல்லது, பிரயாணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்,வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், நட்பு வட்டம் விரிவடையும், கௌரவமான சம்பவங்கள் நடைபெறலாம்.

**கும்பம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் கூடும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுவாரஸ்யமான நாள்,தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்,பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவம் ஒன்று இல்லத்தில் நடைபெறலாம், பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், இரவு, பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**விருச்சிகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும், நண்பர்களின் மூலம் உதவிகள் கிடைக்கலாம், உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்:** எடுத்த காரியத்தை முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**கன்னி:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் பிரியப்படுவீர்கள்,பொருளாதார நிலை உயர என்ன வழியென்று சிந்திப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவாளக்கோல விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அத்திதோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய மணவாளக்கோல விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதற்கமைய 108 சங்குகளால் அபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெற்று அம்பாள் வெளி வீதி வலம் வருவார்.


மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

மேலும் சங்காபிஷேக கலை நிகழ்வுகள் பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய முன்றலில் ஆலய பரிபாலன சபைத்தலைவர் நா.வே. தம்பியப்பா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை அதிபர் திருமதி குமுதினி அசோக்குமார், சிறப்பு விருந்தினராக கோப்பாய் தெற்கு ஜே/260 கிராம சேவையாளர் சி.பாலசுந்தரம் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

நிகழ்வின் ஆசியுரையினை ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ.சு.மகாதேவக்குருக்கள் வழங்குவார்.

தொடர்ந்து ஆலய பிரதம குரு மற்றும் சென்ற ஆண்டின் பரிபாலன சபை உறுப்பினர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறும். (2)




## விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை

(கொழும்புத்துறை)

யாழ்.சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான கலாச்சார விழுமியங்களை பேணும் வகையில் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய பதின்ம வயது திருமணம், பாலியல் வன்புணர்வு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

நூறு மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றும் விரைவில் நடத் தப்படவுள்ளதாகவும் இதில் பங்கு பெற விரும்பும் மாண வர்கள் யாழ். சர்வமதக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறும் செயலாளர் அருட்தந்தை ஐ.டி.டிக்ஸன் அடிகளார் கேட்டுள்ளார். (2-51)

# வடமராட்சி திக்கம் வடிசாலை சர்வதேச தரத்திற்கு மாற்றப்படும் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி திக்கம் வடிசாலையை சர்வதேச தரத்திற்கு மாற்றியமைப்பதே தனது நோக்கம் என்று தெரிவித்துள்ள அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, திக்கம் வடிசாலை குறித்து பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பாராளுமன்றத்திலேயே பதிலளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையே நாம் எடுப்போம். திக்கம் வடிசாலையைப்பொறுத்தவரை அது அந்த சமூகத்தைச் சார்ந்த மக்களின் நலன்களை அடிப்படையாக கொண்டதாகவே அமையும்.

மக்களின் நலன்களுக்கு தடையாகயாகவிருந்தாலும் அத்தடைகள் உடைத்தெறியப்படும். திக்கம் வடிசாலை குறித்து அந்த சமூகத்தைச் சேர்ந்த மக்களுடன் பேசியிருந்தோம். அத்தோடு அங்கு பணியாற்றிய பணியாளர்களுடனும் பேசியிருந்தோம். பணியாளர்களுக்கான மாற்று ஏற்பாடுகள் குறித்தும் தொழிற்சாலையை புனரமைப்பதோடு சர்வதேச தரத்திற்கு இதன் செயற்பாடுகள் இருக்கவேண்டும் என்பது எனது விருப்பம்.

இந்த தொழிற்சாலை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். இதன்போது திக்கம் வடிசாலை புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

ஆனால் எம்மால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு தடையாக பத்திரிகைகளில் அறிக்கைகளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்து வருகின்றனர். இவ்வாறான அறிக்கைகள் வரும்போது மக்கள் மௌனமாகயிருந்தால் பாதிப்புக்கள் மேலும் அதிகரிக்கும்,

போற்றுவோர் போற்றற்றும் தூற்றுவோர் புளுதிவாரித் தூற்றட்டும். ஆனால் எமது செயற்பாடுகள் தொடரும். எம்மீது பிழையிருப்பின் நாம் மன்னிப்பு கோருவோம். மேலும் திக்கம் வடிசாலை குறித்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் முடிவு எடுக்கப்படும்.

அதேவேளை எமது அமைச்சினால் கேள்வி அறிவித்தலும் விடுக்கப்படும.

திக்கம் வடிசாலை குறித்து பாராளுமன்றத்தில் எழு ப்பப்பட்ட கேள்விக்கு பாராளுமன்ற த்தில் பதில் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி றூபினி வரதலிங்கம் மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-60)

## நிர்வாகிகள் தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு- பருத்தித் துறை கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதற்கமைய தலைவராக மு.ஜெயதேவன், உப தலைவராக ப.அல்வின், செயலாளராக சு.ஜனார்த்தனன் ஆகியோர் தெரிவாகினர்.

மேலும் நெறியாளர் சபை உறுப்பினர்களாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை வைத்தியர் திருமதி எல்.சரோஜினிதேவி, சி.ஜெயராஜா, சி.ஈஸ்வரன், ச.ரஜீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (2-10)

## வீரமாகாளிக்கு மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் நடைபெற்று எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (2)

# கொழும்புத்துறை நீர் வடிகால் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறை- சுவாமியார் வீதியில் அமைந்துள்ள நீர்வடிகால் புனரமைப்புப் பணிகள் நீண்ட காலத்தின்பின் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பல வருடங்களாக இந் நீர் வடிகால் புனரமைக்கப்படாது தூர்வடைந்திருந்தமையால் மழை காலத்தில் இப் பகுதியில் அதிகளவான நீர் தேங்கி நின்று மக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வந்துள்ளது.

தற்போது இவ்வடிகால் புனரமைக்கப்பட்டு வருவதனால் இதுவரை காலமும் அப் பகுதி மக்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு காணப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் யாழ்.மாநகர முன்னாள் மேயர் றீகனின் கண்காணிப்பில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (2)


## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிசங்கத்தானை வைரவ கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும் இடம் பெறும்.

மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (2-29)






தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் கணவனை இழந்த பெண்களைத் தலைமையாக கொண்ட குடும்பங்களை சேர்ந்த பாடசாலையில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கும் அவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக மாதாந்த உதவித்தொகை வழங்கப்பட்ட து.யாழ் மாநகர சபை எல்லைக்குள் தெரிவுசெய்யப்பட்ட சுமார் நூறு குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் மாதாந்த உதவித்தொகை வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேள்வியை நிறுத்தக்கோரி உண்ணாவிரத போராட்டம்




யாழ். மாவட்டத்திலுள்ள கோவில்களில் மேற்கொள்ளப்படும் மிருகபலியை நிறுத்துமாறு கோரி, தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் கோவிலுக்கு முன்பாகவுள்ள வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை உண்ணாவிரப் போராட்டம ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அறவழி போராட்டக்குழுவின் நிறுவுனர் மறவன்புலவு க.சச்சிதானந்தம், அதன் தலைவர் ஸ்ரீ.சக்திவேல், செயலாளர் எஸ். தங்கராசா, யாழ்ப்பரணம் சின்மயா மிஷன் சிவனேந்திரா சைத்தனிய சுவாமி, சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனத் தலைவரும் சைவ மகாசபைத் தலைவருமான க. கலியுகவரதன் ஆகியோர் இணைந்து இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கீரிமலை, கவுணாவத்தை நரசிம்ம வைரவர் கோவிலில் வருடாவருடம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேள்வியை நிறுத்துமாறு மதநம்பிக்கைகள் மற்றும் ஜீவகாருண்ய அடிப்படையில ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா, இந்த வேள்வியை நடத்துவதற்கு சட்டக் கட்டுப்பாடுகள் விதித்து கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

அதாவது வேள்வியை நடத்த வேண்டுமானால், விலங்குகள் இறைச்சிக்காக வெட்டப்படும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு-4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒரு விலங்கு வெட்டப்படும்போது மற்றைய விலங்கு பார்க்காத வகையிலும் விலங்குகள் வெட்டப்படும் இடத்தில் ஒருதுளி இரத்தம் சிந்தாத வகையிலும் இறைச்சிக்காக வெட்டப்படும் ஒவ்வொரு விலங்குக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதி பெறப்பட்டும் வெட்டப்பட வேண்டும்

அத்துடன், மிருக வதைக்கு எதிரான சட்டத்தில் கூறப்பட்டுள்ள எந்தவொரு சரத்தும் மீறாத வகையில் நடக்க வேண்டும் போன்ற சட்டக் கட்டுப்பாடுகளை விதித்தார்.

மேலும், இதனை இளவாலை பொலிஸார் கண்காணிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், வேள்வியை நடத்துவதற்கு வலி. வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச சபையிலிருந்து அனுமதி கிடைத்துள்ளது. இதற்கமைய, இன்று சனிக்கிழமை தாங்கள் வேள்வியை நடத்தவுள்ளதாகவும் நரசிம்ம வைரவர் ஆலய பரிபாலனசபைத் தலைவர் பொ.இராசேந்திரம் தெரிவித்தார்.

ஒரு புறம் ஆலயங்களில் நடைபெறும் மிருகபலியை நிறுத்தக்கோரி போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற போதும் மறுபுறம் ஆலயங்களில் வேள்விகள் இடம் பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (6)


## வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1 பரப்பு 15 1/2 குழி காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0777111400

(6720)

## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(c-7630)



## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்
## கம்பன் விழா- 2014

''கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்''



இன்று இரண்டாம் நாள்
14.06.2014- சனிக்கிழமை

**காலை 9.00 மணி**

*மங்கலவிளக்கேற்றல்:-* திரு.பூ.ஸ்ரீதரசிங் அதிபர், பூபாலசிங்கம் புத்தகசாலை)

*கடவுள் வாழ்த்து:-* செல்வி சோ.ஹம்சத்வனி

*தலைமையுரை:-* திரு.வே.கா.கணபதிப் பிள்ளை (அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

*தொடக்கவுரை:-* கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தா

**கவிதெரி அரங்கம்**

நடுவர்: - புலவர்மா.இராமலிங்கம்

பொருள்:- ''அணிசெய் காவியம்...''

உவமை:- ரி.ரெங்கராஜா

உருவகம்:- சோ.பத்மநாதன்

தற்குறிப்பேற்றம்:- எஸ்.சிவலிங்கராஜா

உயர்வு நவிற்சி:- ந.விஜயசுந்தரம்

பிறிது மொழிதல்:- ஸ்ரீ.பிரசாந்தன்

வஞ்சப்புகழ்ச்சி:- வி.அசோக்குமாரன்



புலவர்
மா.இராமலிங்கம்
(தமிழ்நாடு)



பேராசிரியர்
வி.அசோக்குமாரன்
(தமிழ்நாடு)

**மாலை 4.30 மணி**

*மங்கல இசை:-* திரு.பி.எஸ்.பாலமுருகன் குழுவினர்

*மங்கல விளக்கேற்றல்:-* திரு.எஸ்.பாலசிங்கம் (லண்டன் சைவமுன்னேற்றச் சங்கம்)

*கடவுள் வாழ்த்து:-* செல்வி பரமேஸ்வரி கணேசன்

*தலைமையுரை:-* கௌரவ.யோகேஸ்வரி பற்குணராஜா (முதல்வர், யாழ்.மாநகரசபை)

*தொடக்கவுரை:-* திரு.ச.அமிர்தலிங்கம் (பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி)

**பட்டிமண்டபம்**

நடுவர்: - கம்பவாரிதி இ.ஜெயராஜ்

பொருள்:- ''கம்பனின் தன்னிகரற்றபடைப்பாளுமை பெரிதும் வெளிப்படும் பாத்திரம்...''

கைகேயியே! வி.அசோக்குமார் ந.விஜயசுந்தரம் ச.லலீசன்

வாலியே! ரி.ரெங்கராஜா ஸ்ரீ.பிரசாந்தன் அ.வாசுதேவா

கும்பகர்ணனே! மா.இராமலிங்கம் இரா.செல்வவடிவேல் கு.பாலசண்முகன்

(இ

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

த.சிவசங்கர் (தலைவர்) ச.மார்க்கண்டு (செயலர்) த.ஜெயசீலன் (பொருளாளர்)

அகில இலங்கைக் கம்பன் கழகம்

லோ.துஷிகரன் (தலைவர்) அ.வாசுதேவா (செயலர்) கி.கிருபானந்தா (பொருளாளர்)

யாழ்ப்பாணக் கம்பன் கழகம்



இவர்களுக்கு **மணமகள் தேவை** — கல்யாண மாலை — இவர்களுக்கு **மணமகன் தேவை**

**மணமகள் தேவை**

பிறப்பு: 1986இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 22
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc (UK - Waiting for PR)
தொ.இ: B/3262

பிறப்பு: 1984இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா: 34 ¾
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: AAT / காசாளர் (பிரான்ஸ் PR)
தொ.இ: B/3265

பிறப்பு:1981கிறீஸ்தவமRC
நட்சத்திரம்:திருவாதிரை2
கி.பா: 80 சூரிசெவ்ல
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Civil Engineering (பிரான்ஸ் Not PR)
தொ.இ: B/3267

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 29.25 சூரி செவ் 9இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L வியாபாரம்
தொ.இ: B/3271

**மணமகன் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 49
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: ஆசிரியர் / பட்டதாரி (சங்கீதம்)எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்
தொ.இ: G/3289

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 18.75
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3291

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 33.75 சூரி செவ் 7 இல
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/3292

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம் 4
கி.பா: 44 .
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA / அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ: G/3293

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ... செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசாரணைக் குழுவிற்கு பதிலளிக்க நான் தயார்

## சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்கு பதிலளிக்க தாம் தயார் என்று முன்னாள் இராணுவ தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கை ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் கருத்து கூறுகையிலேயே சரத் பொன் சேகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கை மீதான விசாரணை தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இலங்கைக்கு விஜயம் செய்தவுடன் முதலில் அக்குழு என்னிடமே விசாரணையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

அன்று யுத்த காலத்தில் எனது தலைமையிலேயே யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. இராணுவத்தினர் எந்தவொரு போர்க் குற்றத்தையும் மேற்கொள்ளவில்லை என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன். இது தொடர்பில் எந்தவொரு நீதி மன்றத்துக்கும் சென்று பதிலளிக்க நான் தயார்.

இராணுவத்தின் நற்பெயரைப் பாதுகாக்க நான் கடமைப்பட்டுள்ளேன். அதனால், எந்தவொரு குழு இலங்கைக்கு வந்தாலும் பயப்படத் தேவையில்லை.

அந்த குழுவுக்கு பதிலளிக்க நான் தயார். யுத்தம் தொடர்பான எந்தவொரு பொறுப்பையும் ஏற்க நான் தயார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு இலங்கைக்கு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டால், இலங்கை இராணுவத்தினர் யுத்தக் குற்றத்தை மேற்கொண்டார்கள் என்றே அர்த்தப்படுத்தப்பட்டு விடும்.

அது யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவத்தினரின் பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கமாகும். அதனால், விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க தயங்கத் தேவையில்லை என்றார். (2)



எதிர்காலத்தில் பசுமை உலகம் நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு பயன் மரக்கன்றுகள் வழங்கப்பட்ட போது...

## இரு புடைவை வடிவமைப்பாளர்களின் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்தொடரின் கருத்துரையில் ஐந்தாவது நிகழ்வாக மரி மற்றும் மரிசா ஞானராஜ் சுற்றிகட்டுதலும் இடைநெய்யப்பட்ட காரணங்களும் எனும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்கள். இவ்வுரை கடந்த 40 வருடமாக இந் நாட்டில் புடைவை வடிவமைப்பில் இரு சந்ததியிடையே நிகழ்ந்திருக்கும் பயிற்சி, உத்தி நுட்ப மற்றும் கலையாக்கம் பற்றியதாக அமையும்.

மேற்படி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம், 199, கோவில் வீதி, நல்லூரில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவருரையும் கலந்துகொள்ளுமாறு முகா மையாளர் தி.சதீஸ்குமார் கேட்டுள்ளார். (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வல்ககள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 250 | 200 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 140 | 100 | 130 | 120 |
| கரட் | 180 | 160 | 100 | 200 |
| பூசணி | 70 | 70 | 80 | 80 |
| புடோல் | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 180 | 140 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 180 | 80 | 110 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 160 | 170 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 250 | 130 | 170 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 300 | 240 |
| போஞ்சி | 140 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | – | 60 | 100 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30 | 30 | 20-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 44

துசா துசா


எல்லோருடைய வாழ்க்கையும்
ஒரு மெழுகுவர்த்தி போலதான்.
தூரத்தில் இருந்து பார்த்தால்
ஒளி மட்டும் தெரியும்.
அருகில் சென்று பாருங்கள்
அவர்கள் உருகி கண்ணீர்
வடிப்பது தெரியும்.

சென்து ஜோன்



சிலைகளுக்கு பால் ஊட்டுவதை நிறுத்தி ஏழைகளுக்கு பாலை ஊட்டுங்கள்

மதி மதிவதனி



டாடி எனக்கு ஒரு டவுட்டு?
அண்டைக்கு சண்டை நடக்கும் போது நீங்க தானே முதலமைச்சரா இருந்தீங்க அப்ப என்ன டாடி பண்ணீங்க? அண்டைக்கு உங்களுக்கு பக்கவாதமா டாடி? சொல்லுங்க டாடி சொல்லுங்க?

பிரபா பிரதீப்



டிலான் தர்மரத்தினம்




கரிஸ் கோகில்


- கோபத்தில் ஒரு முடிவும் எடுக்காதே...
- மகிழ்ச்சியில் ஒரு வாக்கும் கொடுக்காதே...
- அழுகையில் ஒருவரையும் நம்பாதே...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்துழைப்பு வழங்காவிடினும் விசாரணை முன்னெடுக்கப்படும்

## ஐ.நா.பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அறிவித்துள்ளது. மனிதவுரிமை பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட மாட்டாது என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

எனினும், நன்கு பரீட்சிக்கப்பட்ட நம்பகமான வழிமுறைகளின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காத போதிலும் விசாரணைகளை காத்திரமான முறையில் மேற்கொள்ள முடியும் என ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் பேச்சாளர் ருபர்ட் கொட்வில்லி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு அரசாங்கங்களின் ஒத்துழைப்பு இன்றி ஏற்கனவே இவ்வாறான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

12 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றது. விசாரணைகளை நடத்துவதற்காக 11 இலட்சத்து 92 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் விசாரணை குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பது தொடர்பில் பாராளுமன்றமே முடிபு செய்யுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன் பின்னர் வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

இதுவே விசாரணை குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் இறுதியாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.தே. கட்சியானது பிரதான எதிர்க்கட்சியான தம்முடன் அரசு கலந்துரையாட வேண்டும் என் எதிர்பார்த்து நிற்கிறது.(2)

# சைவப்புலவர் தேர்வு முடிபுகள் வெளியாகின

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் 2014 சித்திரையில் நடத்தப்பட்ட சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகளின் பெறுபேறுகளின் முடிவுகள் வெளிவந்துள்ளன. இதற்கமைய சித்தியடைந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்**

வல்லிபுரம் தயாபரசிவம் (வட்டுக்கோட்டை), நாகன் தவராசா (கோண்டாவில் கிழக்கு),சிதம்பரம் சிவானந்தராசா (கொழும்பு-11),சாமித்தம்பிபொன்னுத்துரை (கொழும்பு- 06),கந்தையா பத்மானந்தன் (தெகிவளை).

**இளஞ்சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்**

தர்மராசாஉதய சங்கர்(திருகோணமலை),மருதப்பு முருகேசு (நல் லூர்), தனஞ்செயன் அருச்சுனன் (வாழைச்சேனை),திருமதி கணேசலிங்கம் நாகபூசணி( கொழும்பு 06),கோபாலபிள்ளைதிலக்ஷன்(களுவாஞ்சிக்குடி), கணேச மூர்த்தி ரவீந்திரன் (கதிரவெளி), தர்மராசா தர்சினி(கல் குடா), தங்கலீலா கந்தசாமி(கரவெட்டி).

மேற்படி தேர்வுகளுக்குத் தோற்றியவர்களுக்குரிய பெறுபேறுகள் அவரவர் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தவர்கள் அவரவருக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புக்களில் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 077 749 7100 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளலாம் என் அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## குருபூசைவிழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை விழா இன்று 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.மா. அனந்தலட்சுமி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநா வுக்கரசர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2)

## 18 இலட்சம் ரூபா பெறுமதியான

# கடற்றொழில் உபகரணங்களை அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்



(கரணவாய்)

வடமராட்சியில் கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு 18 இலட்சம் பெறுமதியான தொழில் செய் உபகரணங்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கடற்றொழில் செய்பவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடலின் போது வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துர்ரையாடலில் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வலிகாமம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினர்களும் ஏனைய கடற்றொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களிடமும் தொழிலாளர்களிடமும் அமைச்சர் நேரடியாக குறை நிறைகளை கேட்டறிந்தார்.

இதில் வடமராட்சி கடல் எல்லையில் கடல் அட்டை, கணவாய் என்பவற்றை தென்பகுதி மீனவர்கள் அனுமதியின்றி பிடித்துச் செல்வதாகவும் கடற்றொழில் சங்கங்களின் பரிசோதகர் வாரத்தில் ஒருநாள் மட்டுமே காரியாலயத்திற்கு வருவதாகவும் கடற்றொழிலாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், தென்பகுதி மீனவர்கள் அனுமதியின்றி தொழில் செய்வதை நிறுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் கூட்டுறவுச் சங்க பரிசோதகர் கிழமை நாட்களில் தவறா்மல் வருவதற்கு ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார்.

மேலும் இதில் கடற்றொழில் செய்வதற்குரிய 18 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் அமைச்சரினால் வழங்கப்பட்டது. (2-60)

# விளையாட்டுப் போட்டி

(சாவகச்சேரி)

லேக்லாண்ட் சர்வதேச அமெரிக்கன் சிறுவர் பாடசாலையின் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி நிலையங்களின் சிறார்களது விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள மேற்படி பாடசாலையின் மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் எல்.சுந்தரேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி எல்.கந்தசாமி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2-[illegible])

# பிரிவுத்துயர் பகிர்வு



### தம்பிப்பிள்ளை சதாசிவம்

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரம் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடா Brompton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சதாசிவம் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு 30 Bramwin Court, Brampton, Torbram Road Steeles Ave East ON L6T 5A9 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி தர்மகுணசிங்கம் தவமணி

கரவெட்டி துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா Lewisham ஐ வசிப்பிடமாகவும்கொண்ட தர்மகுணசிங்கம் தவமணி கடந்த9ஆம்திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு Hither Green Crematorium, Verdant Lane, London SE6 1TP, UK என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### நாகலிங்கம் ரவி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Drancy ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ரவி கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு Sainte- Louise- De- Marillac, Rüe Anatole France, 93700 Drancy, France என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### தம்பிராஜா தசதரன்

யாழ். குருநகர் இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா தசதரன் கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.



### சந்திரகுமார் கோபி ஆனந்

பருத்தித்துறை இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.52 இராஜதுரை வீதி, வைரவப் புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் கோபி ஆனந் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### திருமதி சோதிலிங்கம் தவம்

அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமாகவும் வத்தளை Alwis Town ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் தவம் கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கெரவலப்பிட்டிய பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி புலேந்திரராசா டெஸ்சிராணி

உடுவில் தெற்கு சத்தியபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புலேந்திரராசா டெஸ்சிராணி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிஆராதனை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி யோக்கிம்பிள்ளை திரேசம்மா

இளவாலை பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் ஐக்கிய அமெரிக்கா NewYork ஐ வசிப்பிடமாகவும் கொண்ட யோக்கிம்பிள்ளை திரேசம்மா கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு நியூயோர்க்கில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

834

## ஒன்ணா இருக்க கத்துக்கணும்!

“சிங்கராஜாவுக்கு அன்று நல்ல வேட்டை. ஒரு மானை அடித்துத் தின்றுவிட்டு, குகையின்முன் படுத்திருந்தது. சில்லென்று சுகமான காற்று. சிங்கராஜா பலமாக உண்ட மயக்கத்தில், காற்றை அனுபவித்துக் கொண்டு அரைத்தூக்கத்தில் கண்களை மூடித் திறந்து கொண்டிருந்தது. திடீரென்று தொபுக்கடீர் என்ற சத்தத்தோடு ஏதோ ஒன்று சிங்கத்தின் தலை மீது விழுந்தது. திடுக்கிட்டுப் போன சிங்கம் துள்ளி எழுந்தது. அதன் அருகில் ஒரு பாம்பு உயிருக்குப் போராடிக்கொண்டு இருந்தது.

சிங்கம் கோபத்தோடு தலையை அண்ணாந்து பார்த்தது. அங்கே மரத்தின் மீது ஒரு கழுகு. அந்தக் கழுகுதான் பாம்பைப் பிடித்துக் கொண்டு வந்து கீழே தவறவிட்டு விட்டது எனப் புரிந்தது. கழுகு இறக்கையைப் படபடவென அடித்துக் கொண்டு கீழே பறந்து வந்து பாம்பை மறுபடியும் தன் அலகால் கொத்திக் கொண்டு சென்றது. சிங்கத்துக் குக் கடுங்கோபம்.



அது பக்கத்தில் இருந்த கரடியைப் பார்த்து. இந்தக் கழுகின் திமிரைப் பார்த்தாயா? என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல்,என் தூக்கம் கெட்டுப்போனதைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் போய்விட்டது பார்! என்று கர்ஜித்தது. ஆமாம் சிங்கராஜா! இந்தப் பறவைகளே இப்படித்தான் என்று தூபம் போட்டது கரடி. இந்த நேரம் பார்த்து ஓர் அணில் ஓடி வந்தது. சிங்கராஜா எனக்கு ஒரு பிரச்சினை . நீங்கள் தான் தீர்வு சொல்ல வேண்டும் என்றது. என்ன பிரச்சினை? என சிங்கம் கேட்டது.

அணில், ராஜா எனக்கு இரண்டு நாட்களுக்கு முன் இரண்டு குஞ்சுகள் பிறந்தன.நான் அவற்றை ஒரு மரப்பொந்தில் வைத்து இருக்கிறேன். அந்த மரத்தில் தினமும் ஒரு மரங்கொத்திப் பறவை வந்து டொக்... டொக்... என்று கொத்திக்கொண்டே இருக்கிறது. அதனால் என் குஞ்சுகள் பயத்தில் அழுது கொண்டே இருக்கின்றன. எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை!என்றது. அணில் சொன்னதைக்கேட்ட சிங்கம் கண்களை மூடி யோசித்தது. சோம்பேறியான கரடிக்கு வானில் சிறகு அடித்துப் பறக்கும் பறவைகளைப் பார்த்தாலே பொறாமையாக இருக்கும்.

எனவே கரடி மிகவும் மகிழ்ச்சியோடு ஆஹா நல்ல வாய்ப்பு. இதைப் பயன்படுத்தி பறவைகளைக் காட்டை விட்டே துரத்தி விடலாம் எனத் திட்டம் போட்டது. கரடி பாவம் போல் முகத்தை வைத்துக்கொண்டு ராஜா இந்தப் பறவைகளால் பெரும் தொல்லைதான். நாம் காட்டில் அமைதியாக வாழவே முடியவில்லை.

எப்போது பார்த்தாலும் கீச்கீச் எனக் கத்திக்கொண்டே இருக்கின்றன என்றது. ஏற்கனவே கழுகு தன் தூக்கத்தைக் கெடுத்துவிட்ட கோபத்தில் இருந்த சிங்கராஜாவுக்கு அணிலும் கரடியும் பேசிய விடயங்கள் கோபத்தை அதிகரித்தன. பறவைகளைக் காட்டைவிட்டு விரட்டி விட வேண்டும் என முடிவு செய்தது.

மாலை நேரத்தில் எல்லா விலங்குகளும் சிங்கத்தின் குகையின் முன் கூடின. அப்போது சிங்கராஜா, நண்பர்களே! நான் ஒரு முடிவு எடுத்திருக்கிறேன். பறவைகள் நமக்குப் பல விதங்களிலும் தொல்லைகள் தருகின்றன. எனவே பறவைகளைக் காட்டைவிட்டு வெளியே விரட்டிவிட வேண்டும் என்றது. இதைக் கேட்ட முயல் ராஜா நீங்கள் நினைப்பது தவறு.

பறவைகள் காட்டில் இருக்கும் சிறு புழுப்பூச்சிகளைக் கொத்தித் தின்று விடும். அதனால்தான் காட்டில் நாம் நிம்மதியாக வாழ முடிகிறது. பறவைகள் இல்லாவிட்டால் பூச்சிகள் அதிகரித்து நமக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கும் என்று சொன்னது.

இதைக்கேட்ட சிங்கம், முயலே! நீ எனக்கு ஆலோசனை சொல்லத் தேவையில்லை. ஓடிப்போ என்றது. மற்ற விலங்குகளைப் பார்த்து நீங்கள் இன்று இரவுக்குள் பறவைகளைக் காட்டிலிருந்து விரட்டி அடிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

ராஜாவின் உத்தரவை ஏற்றுக் கொண்ட மிருகங்களெல்லாம் பறவைகளை விரட்டி அடித்தன.

பறவைகள் காட்டை விட்டுச் சென்று நான்கு நாட்கள் ஆகிவிட்டன.

பறவைகளின் சத்தமே இல் லாமல் காடு அமைதியாக இருந்தது. ஆனால், நாளுக்கு நாள் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் துவங்கியது.

சிறுசிறு பூச்சிகளும் புழுக்களும் விலங்குகளின் காதுகளுக்குள்ளும் மூக்குக்குள்ளும் சென்று தொல்லை செய்தன. பலசாலியான யானையைக் கூட அவை விட்டுவைக்கவில்லை. நூற்றுக்கணக்கான பூச்சிகள் யானையின் தும்பிக்கையில் நெளிய ஆரம்பித்தன. யானை ஒரு மரத்தருகே சென்று தன் தும்பிக்கையைத் தேய்த்துப் புழுக்களை விரட்ட முயற்சி செய்து கொண்டிருந்தது. மற்றொரு பக்கம் கரடி தன் கால்களால் முகத்தைச் சுற்றிப் பறந்த பூச்சிகளை விரட்டிக்கொண்டு இருந்தது.

இதையெல்லாம் கவனித்த முயல், நன்றாகக் கஷ்ரப்படட்டும். நாம் எடுத்துச் சொன்னபோது கேட்கவில்லையே! என்று நினைத்தது. சிங்கராஜாவுக்குத் தான் தவறு செய்துவிட்டோம் எனப் புரிந்தது. அது முயலை அழைத்து, என்னை மன்னித்துக்கொள். நான் அவசரப்பட்டு பறவைகளை விரட்டிவிட்டேன். நீ சொன்னதுபோல் புழுக்களும் பூச்சிகளும் பெருகிவிட்டன. என்ன செய்யலாம்? எனக் கேட்டது. பறவைகள் எல்லாம் பக்கத்துக் காட்டில்தான் இருக்கின்றன. நான் பறவைகளின் தலைவனான கழுகு அண்ணாவிடம் பேசி, அழைத்து வருகிறேன் என்றது முயல்.

சரி, நீ போய்ப் பறவைகளைச் சமாதானம் செய்து கூட்டிக்கொண்டு வா. நான் அவற்றிடம் மன்னிப்புக் கேட்கிறேன் என்றது.

முயலும் துள்ளிக் குதித்துக் கொண்டு பறவைகளிடம் ஓடியது. நடந்த விடயத்தைக் கூறியது. பறவைகளும் மகிழ்ச்சியோடு காட்டை நோக்கிப் பறந்தோடி வந்தன.

சிங்கராஜா, பறவைகளே! எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். பறவை இனமும் விலங்கு இனமும் ஒன்றாக வாழ்ந்தால்தான் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை இந்த நான்கு நாட்களிலேயே புரிந்துகொண்டோம். இனி நாம் அனைவரும் ஒன்றாக வசிக்கலாம் என நெகிழ்ச்சியுடன் கூறியது.

இதைக் கேட்ட பறவைகளும் விலங்குகளும் ஒண்ணா இருக் கக் கத்துக்கணும், இந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும் என மகிழ்ச்சியோடு ஆடிப்பாடின.

---

06.2014
14

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1789 - பவுண்டி என்ற பிரித்தானியக் கப்பலின் மாலுமிகளின் கிளர்ச்சியை அடுத்து கப்பலின் தலைவனுடன் சேர்ந்து சிறிய படகொன்றில் தப்பிய 19 பேர் 7,400 கி.மீ தூரம் பயணித்து திமோரை அடைந்தனர்.
- 1800 - நெப்போலியனின் பிரெஞ்சு இராணுவத்தினர் வடக்கு இத்தாலியில் ஆஸ்திரியர்களுடன் போரிட்டு வெற்றி பெற்று இத்தாலியை மீளவும் கைப்பற்றினர்.
- 1807 - நெப்போலியனின் பிரெஞ்சு இராணுவத்தினர் போலந்தின் பிரீட்லாந்து என்ற இடத்தில் ரஷ்யப் படைகளுடன் மோதி வெற்றி பெற்றனர்.
- 1821 - வடக்கு சூடானின் சென்னார் பேரரசன் மன்னன் ஏழாம் பாடி என்பவன் ஒட்டோமான் பேரரசின் தளபதி இஸ்மயில் பாஷாவிடம் சரணடைந்ததன் மூலம் சென்னார் பேரரசு முடிவுக்கு வந்தது.
- 1846 - கலிபோர்னியாவின் சொனோமா என்ற இடத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் மெக்சிகோ மீது போரை ஆரம்பித்து கலிபோர்னியாவைக் குடியரசாக அறிவித்தனர்.
- 1872 - கனடாவில் தொழிற்சங்கங்கள் அதிகாரபூர்வமாக்கப்பட்டன.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பாரிசை ஜேர்மனி கைப்பற்றியது.
- 1940 - போலந்தின் 728 போர்க் கைதிகள் நாசிகளின் அவுஷ்விட்ஸ் வதை முகாமின் முதலாவது சிறைக்கைதிகளாக சேர்க்கப்பட்டனர்.
- 1941 - அனைத்து ஜேர்மனிய மற்றும் இத்தாலிய சொத்துக்களையும் ஐக்கிய அமெரிக்கா முடக்கியது.
- 1941 - எஸ்தோனியர்கள், லாத்வியர்கள் மற்றும் லித்துவேனிய மக்கள் பலரை சோவியத் ஒன்றியம் நாட்டை விட்டு அவர்கள் பகுதிகளை விட்டு வெளியேற்றி வதைமுகாம்களுக்கு அனுப்பியது.
- 1962 - ஐரோப்பிய வான் ஆராய்ச்சி மையம் பாரிசில் அமைக்கப்பட்டது.
- 1967 - சீனா தனது முதலாவது ஐதரசன் குண்டைச் சோதித்தது.
- 1967 - மரைனர் 5 விண்கலம் வீனஸ் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 1982 - போக்லாந்து தீவுகளின் தலைநகர் ஸ்டான்லியில் நிலைகொண்டிருந்த ஆர்ஜெண்டீனப் படைகள் பிரித்தானியப் படைகளிடம் சரணடைந்ததை அடுத்து போக்லாந்து போர் முடிவுக்கு வந்தது.
- 1985 - TWA 847 விமானம் கிறீசில் இருந்து ரோம் செல்லுகையில் ஹெஸ்புல்லா இயக்கத்தினரால் கடத்தப்பட்டது.
- 1999 - தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக தாபோ உம்பெக்கி பதவியேற்றார்.
- 2007 - காசாப் பகுதி தமது முழுக்கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக ஹமாஸ் இயக்கம் அறிவித்தது.

### பிறப்புகள்

- 1899 - யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற யப்பானிய எழுத்தாளர் (இ. 1972)
- 1929 - சே குவேரா, சோசலிசப் புரட்சியாளர் (இ. 1967)
- 1969 - ஸ்ரெஃபி கிராஃப், ஜேர்மனிய டெனிஸ் வீராங்கனை

### இறப்புகள்


- 1965 - கந்தமுருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (பி. 1902)
- 1968 - சல்வடோரே குவாசிமோடோ, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய எழுத்தாளர் (பி. 1901)
- 2012 - காகா ராதாகிருஷ்ணன், பழம்பெரும் தமிழ் சினிமா நடிகர்

### சிறப்பு நாள்

- உலக இரத்த வழங்கல் தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



69

...ஓர் அநாதை இல்லம் அமைப்பது.

அநாதை இல்லம் அமைப்பதொன்றும் அற்புதமான திட்டம் இல்லை.

அந்த அநாதை இல்லத்தின் நோக்கம்தான் அற்புதமானது.

பெற்றவள் தொப்புள்க் கொடியைத் துண்டித்துவிட்டு அநாதையாக்கி விட்டுப்போய் விடுவது போலவே ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு அநாதை இல்லங்களும் அவர்களை வெளியேறு என்று சொல்லி வீதிக்குத் தள்ளிவிடுகின்றன.

"வளர்ப்பது மட்டுமல்ல; வளர்க்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதும் அநாதை இல்லத்தின் அருங்கடமை. அப்படி ஓர் அநாதை இல்லத்தை ஏற்படுத்துவதுதான் என் எதிர்காலத் திட்டம்" என்று திட்டவட்டமாய்த் தெரிவிக்கிறார் பாலு.

எத்தனை பேருக்கு இந்த மனம் வரும்?

உத்தரவாதம் இல்லாத இந்தச் சமூக அமைப்பில் மனிதன் தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கருதுவதில் பிழை இல்லை.

ஆனால் உத்தரவாதத்தின் எல்லை எது?

சென்னை முழுவதும் தனக்குச் சொந்தமாய் இருந்தால்தான் தனக்குப் பாதுகாப்பு என்று கருதுகிறான் ஒருவன்.

சென்னையையும் வாங்கிவிடுகிறான்.

திடீரென்று ஒரு சிந்தனை வருகிறது.

ஆண்டுக்கு ஆண்டு ஆந்திராவில் சென்று கடக்கிற புயல் என்றாவது ஒருநாள் சென்னையைக் கடப்பது என்று திடீரென்று முடிவெடுத்தால்...?




சரி. எதற்கும் காஞ்சிபுரத்தையும் வாங்கிப் போட்டு வைப்போம் என்று அதற்கும் முயற்சி செய்கிறான்.

உத்தரவாதத்தின் எல்லை எது?

தனக்குப் பிறகுதான் மற்றவர்களுக்கு என்றால் முடிவு ஏது?

ஈட்டிய பிறகு கொடுப்போம் என்றில்லாமல் ஈட்டிக் கொண்டே கொடுப்போம் என்பதுதான் பாலுவின் கொள்கை.

மீன் தரையில் வாழச் சம்மதித்தது மாதிரி அசைவத்திலிருந்து சைவத்திற்குச் சட்டென்று தாவினாரே அந்த திடம்-

வாடிக்கையாளர்கள் கடைக்குள் நுழையும் போதே அவர்கள் வாடிக்கையாளர்களா இல்லை வேடிக்கையாளர்களா என்று கண்களை பார்த்தே கண்டுபிடித்து விடும் அந்தக் கணிப்பு-

தனக்கென்று ஒரு தங்க நாற்காலி இருந்த போதிலும் தனக்குத் தொழில் கற்றுக் கொடுத்த முதலாளியிடம் இன்றும் அதே பழைய பணிவு-

விபத்தில் முறிந்த கால் அரைக்காலாகி முழுக் காலாவதற்கு முக்கால் வருடம் ஆகும் என்று மருத்துவக் குறிப்பு பேசிய போது இரண்டே மாதத்தில் தொழிலுக்கு அவர் எழுந்து நடந்து வந்த தீரம்-

தன்னை விடவும் தன் இல்லத்தரசி லட்சுமி அம்மாளுக்கு அவர் தந்திருக்கும் சுதந்திரம்-

தன் ஒரே புதல்வன் அய்யப்பனுக்கு அவர் ஊட்டி வளர்க்கும் ஒழுக்கம்-

மருமகளைத் தன் நான்காம் மகள் என்று நேசிக்கும் பாசம்-

கலைஞரின் தமிழ் மீது அவர் கொண்டிருக்கும் காதல்.

இவையெல்லாம் அவர் மீது நான் கொண்டிருக்கும் அன்பையும் மதிப்பையும் அடர்த்தியாக்குகின்றன.

அவரிடம் நான் நேசிக்கிற- பெரிதும் நேசிக்கிற பெருங்குணம் இன்னொன்று உண்டு.

அவராக என்னைத் தொலைபேசியில் அழைக்கமாட்டார்.

கேட்டால், "உங்கள் நேரம் எங்கள் பொன்னைவிட உயர்ந்தது. நீங்கள் எனக்காகச் செலவழிக்கும் அந்தச் சில நிமிடங்களில் லட்சக் கணக்கான இதயங்களுக்காகக் கவிதை எழுதலாம்" என்று சொல்லிச் சீதளமாகச் சிரிப்பார்.

இப்படிப்பட்ட நண்பர்கள்தாம் எனக்கு வேண்டும்.

பொன்னில் நால்வகை என்கிறார்கள்.

ஆடகம்- கிளிச்சிறை- சாம்புநதம்- சாதரூபம்.

ஐந்தாவது பொன் ஒன்று இருந்தால் அதற்கு "பாலு" என்று பெயர் வைக்கலாம்.

*(தொடரும்)*

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 04 இல் கூட்டெண் 01 இன் பலன்கள்



20

### தோற்றம்

இது ராகுவுடன் சூரியன் இணைந்து தரும் பலன் ஆகும். உயரமாக கொஞ்சம் தடிப்புடன் இருப்பர். சுருட்டை முடியுடன் இருப்பர். அழகாக இருப்பர். உடற்பயிற்சி செய்தால் பயில்வான் போலாவார். உடல் நன்கு வளையக் கூடியதாகும். சதுர முகம், சதுரக் கை, விரல் முனைகளில் இருக்கும். கண்கள் அழகாக இருக்கும். இரட்டை நாடி சரீரத்துடன் வாட்ட சாட்டமாகத் தோன்றுவர். எடுப்பான மூக்கு இருக்கும். சுமாரான நெற்றி அமைந்திருக்கும்.

### குணம்

சராசரிக் குடும்பத்தில் பிறக்கும் இவர்கள் குண்டாக சிறு வயதில் இருப்பர். நன்கு விளையாடுவர். எல்லோருக்கும் பிடித்தவராகப் பழகுவர். சமயத்திற்கேற்ப ஆளுக்குத் தக்கபடி நடந்து கொள்வார். நிறையப் பேசுவர். எளிதில் அனைத்திலும் நம்பிக்கை கொண்டிடுவர். பழகுபவருடைய குணம் தாமும் கொள்வர்.

உடல் பலமிருக்கும். இங்கிதம், மரியாதை தெரிந்து உலக நடைமுறைப்படி நடப்பர். தம் வீட்டில் இருப்பதை விட பிற வீட்டில்தான் அதிகம் இருப்பர். பிறரைச் சார்ந்தும் முதலில் இருப்பர். நம்பி இவரிடம் உதவி எதையும் எதிர்பார்க்கலாம். நாணயமாக நடந்து கொள்வர். இவர் தாம் ஏற்ற பொறுப்புக்களை மிகச் சரியாக நிறைவேற்றுவர். இருந்தாலும் தம் இச்சைப் படியே நடக்கத் துணிவர். வேலைகளை விரும்பி ஏற்க மாட்டார். நோக்கம் எதுவும் இல்லாமல் வாழ்வர்.

இவர் வாழ்வில் கல்வித் தடை வரும். வீட்டை விட்டு வெளியேறுவர். இதுபோன்ற திடீர் திருப்பங்கள் ஏற்படும். பெற்றோர், மற்றோர் பேச்சைக் கேட்க மாட்டார். ஆனாலும் நல்ல பெயர் எடுப்பார். தம் வாழ்வை பொறுப்பின்றி வீணடித்துக் கொள்வர். இதமாகப் பேசி இவரிடம் விசுவாசம் உள்ளது போல நடிக்கும் தீய நண்பருக்கு நன்றியுடனும் நட்புடனும் நடப்பர்.

தயக்கம் கொண்டு எதையும் தள்ளிப் போடும் இவர்களைத் தட்டிக் கொடுப்பது போல யாராவது ஊக்குவித்தால்தான் காரியங்களில் ஈடுபட்டு வெற்றிகரமாக முடித்து சாதனை புரிவர். சகிப்புத் தன்மை இருக்கும். பசி, பட்டினி பொறுப்பார். எவருடனும் பழகுவார். நல்லவர். முகத்துதிக்கு மயங்கி தம் பொருளை பிறருக்கு வழங்கி விடுவார்.

நடுவயது குணம் மாறும். உருப்படியான வேலைகளில் இறங்குவார். தாமே தம் கல்வியை அனுபவங்களாலும் நூல்களாலும் கூட்டிக் கொள்வர். பேச்சை தம் லாபங்களுக்குப் பயன்படுத்துவார். தொழில் திறமையால் முன்னேறுவர்.

### குடும்பம்

மிகவும் செலவு செய்வர். பிறர் பாராட்ட சக்திக்கு மீறி செலவு செய்பவராக இருப்பார். ஊர் சுற்ற, பல சங்கதிகளை அறிய, நண்பர்களுடன் திரிய, அரட்டை அடிக்க விரும்பம் கொண்டு இருப்பதை அழிப்பர். இவருக்கு அமையும் இல்லறத் துணைவியே குடும்ப நிர்வாகம் செய்தாக வேண்டும். கடன் வாங்குவார். காதல் மணம்கூட செய்து கொள்வர். நல்ல வாரிசுகள் பிறக்கும்.

சிறிது சிறிதாக வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட முன்னுக்கு வருவார். அதிர்ஷ்டம் உண்டாகும். பணம், வீடு, வாகனம் அமையும். சொந்தத் தொழிலில் குடும்பத்தை நல்ல நிலையில் வைப்பார். மகிழ்ச்சியோடு வாழ்வார்.

குடும்பத்தில் அனைவரையும் அடக்கி ஆளுபவராக இருப்பார். சுருக்கென தைக்கும் படியே பேசி விடுவார். இதனால் சில சலசலப்புகள் குடும்பத்தில் உண்டாகும். பூர்வீக சொத்து கொஞ்சமாவது இருக்கும். ஆனால் இவர்களுக்குப் பயன்படாது.

### தொழில்

அச்சுத் தொழில், போக்குவரத்து துறைத் தொழில், வானொலி, தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட தொழில்கள், நூல் எழுதுதல், புத்தக வியாபாரம், பேச்சாளராதல், பிரசாரகனாதல், அரசு, தனியாளிடம் வேலை பார்த்தல். ஹோட்டல் நடத்துதல். வண்டி, வாகனம் தயாரித்தலும் விற்றலும் ஓட்டுதலும் பொருத்தமான தொழில் ஆகும்.

அக்னி, அமிலம், மின்சாரம், இயந்திரங்கள் தொடர்பான தொழில்களும் இவர்களால் செய்யப்படுவனவாகலாம். பத்திரிகை நடத்தலாம். வாக்கு வன்மையுள்ளவர்களானதால் வக்கீல் ஆகலாம். கட்டடம் கட்டும் ஒப்பந்தம் எடுத்தலும் செய்யலாம். எழுத்துத் துறையில் கவிஞராகப் புகழ் பெறலாம். இங்கு கூறப்பட்ட ஏதாவது ஒரு துறை விஞ்ஞானியாகவும் முடியும்.

### நோய்


நடுவயது வரை காய்ச்சலைத் தவிர வேறொரு நோயும் வராது. ஆனால் பிறகு வெப்பத்தால் உண்டாகும் நோய்கள் வரலாம். உடல் உறுப்பு, கை, கால்கள் போன்றவை கீழே விழுவதால் உடையலாம். மஞ்சட் காமாலை, மலேரியா, ஜுரம் வரும். கண் கோளாறு, வாயுவால் உண்டாகும் தொல்லை, அடி முதுகு வலி ஏற்படும். குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டால் ஈரல் கெடும். அரசாங்க விரோதம் ஏற்படலாம்.

*(தொடரும்)*

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் திருமதி இளங்கோவன் கிருபாகரி மாணவன் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் மாணவர்களின் நாடக நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- என்.குமார்)





யாழ்.கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் அமரர் அப்புத்துரை தற்பரானந்தனின் நினைவுப் பேருரை அண்மையில் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப்பீட இசைத்துறை தலைவரும் மேற்படி வித்தியாசாலையின் பழைய மாணவனுமாகிய கலாநிதி ஸ்ரீ.தர்ஷனன் நினைவுப் பேருரை நிகழ்த்துவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் வித்தியாசாலையின் பழைய மாணவன் கதிர்காமநாதன் பாலேந்திரன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய புத்தாண்டுவிழா அண்மையில் நடைபெற்ற போது...

நிழல்கள்







இலங்கை பத்திரிகை ஆணைக்குழு நடத்திய **சமூக ஊழல்களும் பத்திரிகையும்** எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் யா/இடைக்காடு மகா வித்தியாலயத்தை சேர்ந்த மாணவி தீபிகா தங்கவேலு தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கான பணப்பரிசில் மற்றும் சான்றிதழ் அண்மையில் வழங்கப்பட்ட போது...




வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன வழிகாட்டலின் கீழ் பிரதேச இளைஞர் கழகங்களின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் வலி.தென்மேற்கின் அனைத்துப் பகுதிகளிலும் இளைஞர் கரங்களால் பசுமை உலகம் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கமைய மானிப்பாய் மேற்கு இளைஞர் கழக எல்லைக் குட்பட்ட நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் மரக்கன்றுகள் அண்மையில் நாட்டி வைக்கப்பட்டபோது...

(படம் :- மானிப்பாய் செய்தியாளர்)



சர்வதேச குருதிக் கொடையாளர்கள் தின நிகழ்வில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் இடம்பெற்ற **நிறம் மாறாத நிறங்கள்** எனும் நாடக ஆற்றுகை நிகழ்வு அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நாடகத்தில் பங்கு பற்றிய மாணவர்களை படத்தில் காணலாம்.

(படம் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் முன்னேற்ற நடவடிக்கைகள் புறம் தள்ளப்பட்டுள்ளன—

## ரவிநாத் ஆரியசிங்க கடுப்பு

(கொழும்பு)

**இலங்கையின் போர் வலயங்களில் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இலங்கை அரசாங்கம் சவால்களை சமாளித்துள்ளதாக ஜெனீவாவுக்கான நிரந்தர பிரதிநிதி ரவிநாத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் தொடர்ந்து கூறுகையில், போருக்கு பின்னரான இலங்கை அரசாங்கத்தின் முக்கிய முன்னெடுப்புக்கள் யாவும் சர்வதேசத்தினால் புறந்தள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இது இலங்கைக்கு மாத்திரமல்ல. போருக்கு பின்னரான இயல்பு வாழ்க்கைக்கு ஒத்துழைத்த சர்வதேச உள்ளூர் நிறுவனங்களுக்கும் மரியாதைக் குறைவை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

30 வருடங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம் பாரிய முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த உரை ஐக்கிய நாடுகளின் இடம் பெயர்வுகள் தொடர்பான நிபுணர் பெயானியின் உரைக்கு பின்னர் இடம்பெற்றது.

இதேவேளை பெயானி தமது உரையில் இடப்பெயர்வுகள் தொடர்பான விடயங்களில் இலங்கை அரசாங்கம் முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதில், இடம் பெயர்ந்தோருக்கான பாதுகாப்பு, பாலியல் வன்புணர்வு போன்ற விடயங்களில் அதிக கவனம் தேவை என்று அவர் குறிப்பிட்டார். (2)

# போர்க்குற்ற விசாரணைக்குழுவில் சர்ச்சைக்குரிய நிபுணர் நியமிப்பு

## அல் ஜசீரா தகவல்

இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கான குழுவில் சர்சசைக்குரிய நிபுணர் ஒருவர் உள்வாங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் றொபேர்ட் கொல்வில் ஐ மேற்கோள் காட்டி அல் ஜசீரா இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த விசாரணைக்குழுவில் சன்ராட் பேடாஸ் என்பவரும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

அவர் ஏற்கனவே தென் சூடானில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தியவராவார்.

அவர் தென் சூடானின் இராணுவத்துக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுகளை தயாரித்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இலங்கைக்கு எதிரான விசாரணைகளை நடத்தும் குழுவுக்கு ஒத்துழைப்புகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்காக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் சர்வதேச ரீதியில் சர்ச்சையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# இலங்கை உயர் இராணுவக்குழு நைஜீரியாவில் பயிற்சி வழங்கியது

இலங்கையின் உயர் இராணுவக்குழு ஒன்று நைஜீரியாவில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை குறித்து பயிற்சிகளை வழங்கியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தக்குழு நைஜீரியாவின் இராணுவ தலைமையகத்தில் இந்த நிகழ்வை நடத்தியது என்று நைஜீரிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் இராணுவ உயரதிகாரி ஜெகத் ஜெயசூரிய தலைமையிலான குழுவே இந்த பயிற்சிகளை வழங்கியது.

இதில் இராணுவ மற்றும் கடற்படை உட்பட்ட புலனாய்வு அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.

ஆசிய நாடு ஒன்றில் பயங்கரவாதத்தை முறியடித்த நாடு என்ற அடிப்படையில் அதன் அனுபவங்களை பகிர்ந்துக்கொள்ளும் வகையிலேயே இந்த பயிற்சி வழங்கப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த நைஜரிய இராணுவ உயரதிகாரி மார்சல் அலெக்ஸ், இலங்கையின் அனுபவத்தை பெற்று நைஜீரியாவில் பயங்கவாத ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார். (2)

# கவிதா ஆற்றல் திறன் போட்டியில் யாழ்.பல்கலை.மாணவர்களுக்கு முதலாமிடம்

உயர் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவன தமிழ் மாணவர்களின் பன்முகப்பட்ட ஆற்றல் திறனை வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட 2013- 2014 ஆம் ஆண்டுக்கான போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திற்குத் தெரிவாகியுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் ஐந்து மாணவர்கள் முதலாம் இடத்தையும் நான்கு மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் ஏழு மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் 24 மாணவர்கள் சிறப்புச் சான்றிதழையும் பெற்றுள்ளனர்.

அவற்றுள் தமிழ், சிங்கள மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் பி.புஷ்பகாந்தன் முதலாம் இடத்தையும் வாத்திய இசைக்கருவிப் போட்டியில் கே.ராகவேந்திரன் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் முதலாம் இடத்தில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பணமும் கேடயமும் சான்றிதழும் இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தலா 75 ஆயிரம் ரூபா பணமும் சான்றிமும் மூன்றாம் இடத் தில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பணமும் சான்றிதழும் வழங்கப்பட்டன. அப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின்பெயர்விபரம்வருமாறு,

**முதலாம் இடம் பெற்ற மாணவர்கள்**

பி.புஷ்பகாந்தன் (ஆக்கத்திறன் மிக்க ஓவியர்),எஸ்.நிரோசன் (ஆக்கத்திறன் மிக்க கிராமியப் பாடகர்), எஸ். சிவதர்சிகா (ஆக்கத்திறன் மிக்க மெல்லிசைப் பாடகி,வி.வானதி (ஆக்கத்திறன் மிக்க நடனக் கலைஞர் பெண்),ஆர்.நிஷாதரணி குழுவினர் (ஆக்கத்திறன் மிக்க நடனக்குழு), எஸ்.தர்சினி, ரி.திசாங்கினி,எஸ். சுகன்யா, எஸ்.பபிதா, எஸ்.பிரியந்தினி, ஆர்.பஹிப்பிரியா, பீ.கிஷானி, ஜி.வரண்யா கௌரி,பீ.சஜீகா

**இரண்டாம் இடம்பெற்ற மாணவர்கள்**

ரி.ரஞ்ஜித்குமார் (ஆக்கத்திறன் மிக்க மெல்லிசைப்பாடகர்), எஸ். கிஷாந் (ஆக்கத்திறன் மிக்க கிராமியப் பாடகர்),கே.ஜெயப்பிரதா (ஆக்கத்திறன் மிக்க கிராமியப்பாடகி), கே. ராகவேந்திரன் (ஆக்கத்திறன் மிக்க வாத்திய இசைக்கலைஞர்)

**மூன்றாம் இடம்பெற்ற மாணவர்கள்**

ஜே.மேரி றொசிற்றா (ஆக்கத்திறன் மிக்க மெல்லிசைப் பாடகி), எஸ்.சுந்தரப்பிரசாத்( ஆக்கத்திறன் மிக்க மெல்லிசைப்பாடகர்), ஆர்.கஜனி (ஆக்கத்திறன் மிக்க நடனக்கலைஞர் பெண்),ஆர்.ஷோபிதர் (ஆக்கத்திறன் மிக்க நடனக்கலைஞர் ஆண்), டபிள்யூ.கீர்த்தனா (ஆக்கத்திறன் மிக்க வாத்தியக்கலைஞர்),ஜே.மேரி றொசிற்றா (ஆக்கத்திறன் மிக்க கிராமியப் பாடகி,கேராகவேந்திரன் (ஆக் கத்திறன் மிக்க கிராமியப் பாடகர்). (அ)

# போதைப்பொருள் அதிகரிப்பு

நாட்டில் போதைப் பொருள் விநியோக நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறிப்பாக கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இவ்வாறு அதிகளவில் போதைப் பொருள் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு தினங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டைகளின் போது 3 இலட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான போதைப் பொருள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் விநியோகத்துடன் தொடர்புடைய பெரும் எண்ணிக்கையிலான சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(2)

# மஹிந்தவிற்கு அதியுயர் விருது வழங்கி கௌரவிப்பு

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பொலிவியாவின் அதி உயர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. ஜீ.77 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பொலிவியா சென்ற ஜனாதிபதிக்கு அந்த நாட்டின் ஜனாதிபதியினால் இந்த விருது வழங்கப்படவுள்ளது.

பொலிவியாவின் ஜனநாயக விருதான இது சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் வழங்கிய பங்களிப்புக்காக ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளது.

நேற்றும், இன்றும் நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கு வருகை தரும் ஐக்கிய நர்டுகளின் பொது செயலாளர் பான் கீ மூனுக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(அ)

# சிறையில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் விடுப்பு

சென்னை, புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை அருகே, ஆந்திர கடலோரத்தில் கடந்த 7ஆம் திகதி அத்துமீறி மீன் பிடித்த 12 இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர காவற் படையினரால் கைது செய்யப்பட்டு, புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அரசு உத்தரவின்படி நேற்று முன்தினமிரவு இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கு முன்னதாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள்51 பேர் நேற்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின்படி விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,இலங்கை கடற்படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டதாக விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (2)








**கொமர்ஷல் வங்கியின் திருநெல்வேலிச் சந்திக்கிளை இடமாற்றப்பட்டு திருநெல்வேலி தபாற்பெட்டி சந்தியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் பணப்பரிமாற்றம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-உ.சாளின்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் இந்தியாவும் முட்டிக்கொள்ளப் போகின்றனவா?



**13** ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விவகாரத்தில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், கருத்து முரண்பாடுகள் தோன்றுவதற்கான அறிகுறிகள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கடந்த வாரம் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை புதுடில்லியில் சந்தித்தபோது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார் என்பது தெரிந்ததே. ஆரம்பத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பில் பேசப்பட்டது குறித்து, இலங்கை அரசாங்கம் எதையுமே கூறாமல் மறைத்திருந்தது. சந்திப்பில், 13 ஆவது திருத்தம் குறித்து இந்தியப் பிரதமர் வலியுறுத்திய விடயத்தை, யாழ் மாநகர மேயரிடம் இருந்து தெரிந்துகொண்ட என்டிரிவி தொலைக்காட்சி, அதைப் பகிரங்கப்படுத்தியதும், இந்திய வெளிவிவகாரச் செயலர் சுஜாதாசிங் 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்துப் பேசப்பட்டதை உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொழும்பு திரும்பிய பின்னர், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வலியுறுத்தியது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். அதற்கு அவர், 13 ஆவது திருத்தம் குறித்து வலியுறுத்தப்பட்டதை ஒப்புக்கொண்ட அதேவேளை, முழுமையாக அதை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக, இப்போது அமைச்சர்களிடத்திலிருந்து 13 ஆவது திருத்தச்சட்டம், அதன் அதிகாரங்கள் குறித்து கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தில் உள்ள கடும்போக்கு அமைச்சர்கள், 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று போர்க்கொடி உயர்த்துகின்றனர். அதேவேளை, அமைச்சர் டி.யு.குணசேகர, வடக்கு மாகாண சபைக்கு முதலமைச்சராக விக்னேஸ்வரன் இருக்கின்ற நிலையில் அதற்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கலாம் என்று கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், உடனடியாகவே, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினாலும், காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க முடியாது என்று தெரிவித்தார்.

இத்தகைய வாதப்பிரதிவாதங்கள் நடந்துகொண்டிருந்த நிலையில்தான், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கேள்விக்கு நாடாளுமன்றத்தில் பதிலளித்த, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசப்பட்ட விவகாரங்கள் குறித்து வெளிப்படுத்தினார். இது குறித்து ஆழமாகப் பேசப்படாத போதிலும், 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று இந்தியாவுக்கு திட்டவட்டமாக கூறப்பட்டு விட்டதாகவும், குறிப்பாக மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் கூறியிருந்தார். மேலும், எந்தவொரு பிரதேசத்துக்கும் அல்லது இனத்துக்கும் தனித்துவமான வகையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க முடியாது என்ற நிலைப்பாட்டையும் இந்தியாவுக்கு எடுத்துக் கூறியுள்ளதாக, அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

இந்தியாவினதும்- இந்தியாவை ஆளும் பா.ஜ.கவினதும் நிலைப்பாடு 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக இருக்கும் நிலையில் இலங்கை அரசாங்கத்தின் இந்த இறுக்கமான நிலைப்பாடு புதுடில்லிக்கு சவாலானதாகவே மாறியுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தில் இந்தியா எமக்கு கட்டளையிட முடியாது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது, ஓரளவுக்கு மேல் அழுத்தம் கொடுக்கப்பட்டால், இந்தியாவுடன் முரண்பட்டுக்கொள்ளும் சூழல் உருவாகும் என்பதை அந்தக் கருத்து வெளிப்படுத்தியது.

இப்போது, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது. தெரிவுக்குழுவின் மூலம்தான் எந்த தீர்வும் காணப்படும், யாருக்கும் தனியான தீர்வோ, அதிகாரங்களோ தனித்துவமான முறையில் வழங்கப்படாது என்றெல்லாம் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் நரேந்திர மோடி அரசாங்கத்துக்கு புதியதல்ல. இருந்தாலும் இந்தியாவுக்கு- அதாவது சவுத் புளொக்கிற்கு ஆச்சரியமானதாக இருக்காது. இத்தகைய நிலையில், 13 ஆவது திருத்தம், தெரிவுக்குழு என்று முன்னரைப் போலவே இழுத்தடிக்க அரசாங்கம் முனைகிறது என்ற உண்மை இந்தியாவுக்கு விளங்காமல் போகாது.

இந்தியாவின் அழுத்தங்கள் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளதால்தான் தெரிவுக்குழுவுக்கு வராது போனாலும் பரவாயில்லை- அதற்கு யோசனைகளையாவது சமர்ப்பியுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கோரியுள்ளார். தெரிவுக்குழுவு ஏமாற்று வேலை என்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை செயலிழக்கச் செய்வதற்கான சதி என்றும் நம்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு அதற்கு ஒரு யோசனையைச் சமர்ப்பிக்கும்?

இந்த அடிப்படையைக் கூட அரசாங்கம் புரிந்து கொள்ளாமல் இருக்கிறது.

அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு யோசனையை தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்தால், அதைத் தூக்கி குப்பையில் போட்டுவிட்டு, தானாக ஒன்றைத் தயாரித்துக் கொள்ளும் அரசாங்கம், பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் என்று உலகிற்குப் பறைசாற்றும். இதற்காகவேதான், தெரிவுக்குழுவுக்கு யோசனைகளைத் தருமாறு கேட்டுள்ளது அரசாங்கம். இந்தியாவை சமாளிப்பதற்கும், தெரிவுக்குழுவை முன்னகர்த்தியே ஆக வேண்டும். எனவே, தெரிவுக்குழுவை முக்கிய கட்சிகள் இல்லாமலேயே செயற்படுத்த அரசாங்கம் முனைந்தாலும் ஆச்சரியமில்லை. ஆனால், அது எந்த வகையிலும் செல்லுபடியானதாக இருக்காது.

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் தெளிவான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய கட்டத்தில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி வருகிறது. எதற்கும் இணங்க மறுக்கும் இலங்கையுடன் முட்டிக்கொள்ளவும் முடியாத- அதேவேளை விட்டுக் கொடுக்கவும் முடியாத நிலை ஒன்று இந்தியாவுக்கு ஏற்படப்போகிறது. இந்தியா தனது தலையிடாக் கொள்கையை கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் வரைக்கும் இந்த இக்கட்டான நிலை தொடரும்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும் என்ற இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் மறுக்கும்போது- புதுடில்லி மீதான தமிழ்நாட்டின் அழுத்தங்களும் இன்னும் அதிகரிக்கும்.

தமிழ்நாட்டின் நிலைப்பாட்டின் மீதான தார்மீக நியாயங்களும் புதுடில்லிக்கு விளங்கத் தொடங்கும்.

இப்படிப்பட்ட சூழலில் இந்திய உரிய முடிபை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அதாவது தனது மரபு சார்ந்த வெளிவிவகாரக் கொள்கைக்கு அப்பால் சிந்தித்தோ செயற்பட்டோதான் இதற்குத் தீர்வு காண முடியும்.

இது புதுடில்லிக்கு ஏற்கனவே தெரிந்த விடயம்தான்.

பலவீனமான காங்கிரஸ் அரசாங்கம் அத்தகைய மரபு சார்ந்த வெளிவிவகாரக் கொள்கைக்கு வெளியே செல்ல விரும்பவுமில்லை- அதற்குத் தயாராக இருக்கவுமில்லை. ஆனால், பலம் வாய்ந்த தற்போதைய நரேந்திர மோடி அரசாங்கத்தினால் அந்த மரபை முழுமையாக இல்லாவிடினும், ஓரளவுக்கேனும் உடைத்துக்கொள்ள முடியும். அது தனியே இலங்கைத் தீவிலுள்ள தமிழருக்கு நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்புகளை மட்டும் ஏற்படுத்திக்கொடுக்காது. அதற்கு அப்பால், வலுவான இந்தியாவை விரும்பும் இந்தியர்கள் எதிர்பார்க்கின்ற இந்தியாவையும் சுப்பர் பவர் நாடாக மாற்றுவதற்கும் துணைநிற்கும். அத்தகைய முயற்சி, தெற்காசியாவில் இந்தியாவுக்குத் தோன்றியுள்ள அச்சுறுத்தல்களுக்கும் முடிபு கட்டக் கூடும். அத்தகையதொரு முடிபை புதுடில்லி எடுக்குமா என்று தெரியாது. ஆனால், புதுடில்லி தன்னை வலுவான சக்தியாக நிலைநாட்டிக் கொள்வதற்கு கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் இன்னொரு சந்தர்ப்பத்துக்காக நெடுங்காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அது நரேந்திர மோடியின் இந்த ஐந்தாண்டுப் பதவிக் காலத்தில் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைக்குழுவை இலங்கைக்குள் வர அனுமதிக்கக்கூடாது

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உறுதி



(கொழும்பு) ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விசாரணைக் குழு இலங்கை வருவதை தடுப்பதி லேயே அரசாங்கம் தற்போது கூடுதல் அக்கறை செலுத்தி வருகின்றதென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐ. நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளையினால் நியமிக்கப்பட்ட சர்வதேச விசாரணைக் குழு இலங்கைக்குள் அனுமதிக்கப்படக் கூடாது என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பான தீர்மானத்தை பாராளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலேயே எமது முழுக் கவனமும் உள்ளது என்றும் கூறினார்.

சர்வதேச விசாரணைக் குழு இலங்கை வருவது தொடர்பிலான பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரையில், அந்தக் குழு பற்றியோ அவர்கள் முன்னெடுக்கவுள்ள விசாரணைகள் குறித்தோ ஆராய்வது தற்போதைக்கு அவசிய மற்றது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நவநீதம்பிள்ளையினால் நியமிக கப்பட்டுள்ள குழு இலங்கைக்குள் விசாரணைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அதற்கு முகம்கொடுக்க அரசாங்கம் எவ்வாறு தயாராகியுள்ளதென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கருத்துக்கூறும் போது, சர்வதேச விசாரணைக் குழு இலங்கைக்குள் வருவார்களென்ற பேச்சுக்கே இட மில்லாத நிலையில் அதனை எதிர்கொள்வதற்கு தயாராவது அநாவசியமானதும் அர்த்த மற்றதுமான செயலாகும் என்றார்.

விசாரணைக் குழுவின் வருகையை பாராளுமன்ற தீர்மானத் திற்கூடாக தடுப்பதுவே எமது பிரதான குறிக்கோளாக இருப்பதனால் அதற்குரிய செயற்பாடுகளிலேயே எமது முழுக் கவனமும் ஒரு முகப் படுத்தப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார். (2)

# நிதி கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்

(கொழும்பு)

இணையத்தின் ஊடான நிதி கொடுக்கல் வாங்கல்களின் போது எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

அலுவலக கருமாங்களை இலகு படுத்தும் நோக்கில் இணையம் மற்றும் ஏனைய வலையமைப் புக்கள் உருவாக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக பணம் செலுத்தும் போது அரசாங்க நிறுவனங்களின் ஊடாக பணம் செலுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. புற நபர்களிடம் பணம் செலுத்த வேண்டாம் என சுட்டிக்காட்டியுள்ளது.


இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் இணையத் தளத்திற்கு நிகரான ஓர் இணையத்தினை பயன்படுத்தி அண்மையில் பாரியளவில் நிதி மோசடி செய்யப் பட்டமை அம்பலமாகியிருந்தது.

போலியான வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்குவோர் அல்லது மோசடிக்காரர்களிடம் மக்கள் சிக்கி விடக் கூடாது என இலங்கை வெளி நாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மக்களிடம் கோரியுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் ஏதேனும் சந்தேகங்கள் காணப்பட்டால் 1919 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சந்தேகங்களை களைய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# விசாரணையை சந்திக்க அரசு தயாராக வேண்டும்

## விஜயதாச ராஜபக்ஷ எம்.பி.தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைகளுக்கு முகம் கொடுப்பதை தவிர அரசாங்கத்திற்கு மாற்று வழிகள் கிடையாது என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் தீர்மானத்திற்கு அமைவான விசர்ரணைகளுக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

விசாரணைகளுக்கு அனுமதியளிப்பதா இல்லையா என்பதனை பாராளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்கும்.

சர்வதேச சமூகத்தினால் சுமத் தப்பட்டுள்ள பாரதூரமான குற்றச் சாட்டுகளை பொய்ப்பிக்க வேண்டுமாயின் விசாரணைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டும். அல்லது மோசமான எதிர்விளைவுகளை எதிர் நோக்க நேரிடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுமக்கள் உயிரிழந்தமை, திட்டமிட்ட வகையில் பொதுமக்களுக்கான உணவு, மருந்துப் பொருள் விநியோகத்தை தடுத்தமை, வைத்தியசாலைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியமை, பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியமை என பல்வேறு குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத் தப்படவுள்ளது.

சர்வதேச ரீதியான குற்றச் சாட் டுக்களை முறியடிக்க வெறும் பிரசாரங்களை முன்னெடுப்பதில் பயனில்லை.

சர்வதேச விசாரணைகள் தொடர்பில் பாராளுமன்றில் எடுக்கப்படும் தீர் மானத்திற்கு அமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கமுடியாது என்றார். (2)

# தீவிரவாதத்தை ஒழிப்பது குறித்து இலங்கையிடம் கற்க வேண்டும்

## ஜப்பான் தெரிவிப்பு

இலங்கை கடற்படையிடமி ருந்து தீவிரவாதத்தை எவ்வாறு ஒழிப்பது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும் என ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பான் கடல் பாதுகாப்பு படையின் தலைவர் அட்மிரல் கட்சு டோசி கவானோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் காலை அனுராதபுரத்திலுள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பில் இரு நாடுகளுக்கு இடையேயான கடல் பாதுகாப்பு மற்றும் கப்பல்துறை பிரச்சினைகளை பற்றி விவாதித்ததாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையினர் தீவிர வாதத்தை எவ்வாறு வெற்றி கொண்டனர் என்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதன்போது விபரித்தார்.

இதனையடுத்து அட்மிரல் கவனோ தீவிரவாதத்தை எவ்வாறு ஒழிப்பது என்று கற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைத் துறைமுகத் தல் ஜப்பான் ஆர்வம் காட்டி வருவதாகவும், அடுத்த ஓரிரு வருடங்களில் ஜப்பான் 15 போர்க் கப்பலை அனுப்ப போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஜனாதிபதி மஹிந்த அட்மிரல் கவனோவை அம்பாந் தோட்டை துறைமுகத்தை பார்வையிட அழைப்பு விடுத்தார்.

மேலும் ஜப்பானின் ஆதரவுக்கு நன்றியும், ஜப்பான் பிரதமர் சின்சோ ஏப்பை சந்திக்க விரும்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது இலங்கை கப்பல் படை தளபதி வைஸ் அட்மிரல் ஜெயனாத் கொலோமேஜ் கலந்து கொண்டிருந்தார். (2)

# இன்று ஒரு தகவல்

## அத்வைதம்

ஒரு ஊரிலே முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு சிஷ்யர் இருந்தார்.

ஒரு சமயம் அந்த முனிவர் வெளியே எங்கேயோ கிளம்பிப் போனார். மீண்டும் ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் திரும்பி வந்தார்.

அது எப்படி ஆயிரம் வருடங்கள் கடந்த நிலை... என்று கேட்கக் கூடாது. முனிவர்களுக்கு எல்லாம் இது சகஜம்.

ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் அவர் திரும்பி வந்ததனால் சிஷ்யருக்கு தனது குருவை அடையாளம் தெரியவில்லை. இருந்தாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார் என்று நினைத்தார்.

"பசிக்கிறது... சாப்பாடு போடு" என்று முனிவர் கூறினார்.

உடனே அந்த சிஷ்யர் மனைவியிடம் பக்குவமாகக் கூறி, சாப்பாடு போட்டார். அவரும் சாப்பிட்டு முடித்தார்.

"என்ன... திருப்தியாக சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார் சிஷ்யர்.

உடனே முனிவர் நிமிர்ந்து பார்த்து, "நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன்தான் சாப்பிடுவான். அவனுக்குத் தானே திருப்தி ஏற்படும்" என்றார்.

சிஷ்யருக்கோ எதுவுமே புரியவில்லை; அமைதியாக நின்றார்.

பரிதாபமாக முனிவரைப் பார்த்தார்; அதன்பின் முனிவர் சொன்னார்; "இப்போது சாப்பிட்டது நான் இல்லை" எனது தேகம்... அதனாலே தேகத்திற்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா. எனக்கு அதிலே திருப்தியோ அதிருப்தியோ இல்லை" என்றார் முனிவர்.

இதைக்கேட்டதும் அந்த சிஷ்யருக்கு இதுதான் நம்முடைய குரு என்பது ஞாபகத்திற்கு வந்தது. அவரது காலிலே விழுந்து வணங்கினார்.

அதன்பின் அந்த முனிவர் வெளியே சென்று விட்டு ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் திரும்பி வந்தார்.

அவர் திரும்பி ஊருக்குள் வந்து கொண்டிருக்கையில், அந்தச் சிஷ்யர் ஏதோ ஒரு மூட்டையை தலையிலே வைத்துக் கொண்டு தெருவோரமாக நின்று கொண்டிருந்தார். முனிவர் இதைப் பார்த்து விட்டு, "ஏன் இப்படி தெருவோரமாக ஒதுங்கி நிற்கி றீர்கள்" என்று கேட்டார்.

"ராஜா யானை மேலே அமர்ந்திருந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அந்த வேடிக்கையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் சிஷ்யர்.

இதிலே யார் ராஜா? எது யானை? என்று கேட்டார்.

சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைப் பார்த்து விளக்கம் கொடுத்தார்.

"அதாவது மேலே இருக்கிறவர்தான் ராஜா... கீழே இருக்கிறது யானை" என்றார்.

"அது சரி... "மேலே" என்று சொல்வது, என்றால் என்ன? "கீழே" என்று சொல்வது என்றால் என்ன? என்று முனிவர் கேட்டார்.

உடனே இவர் என்ன செய்தார் தெரியுமா?

அப்படியே ஒரே தாவாத்தாவி அந்த முனிவரின் தோளின் மேலே அமர்ந்து கொண்டார்.

அமர்ந்து கொண்ட அவர்; "மேலே", "கீழே" என்றால் என்ன என்று தானே கேட்டீர்கள்?" இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்- என்றார்.

முனிவர் அவரை விட்டு வைக்கவில்லை. அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"அது சரி! நான் "மேலே" நீ "கீழே" என்று சொல்லுகிறாய். நான் யார்? நீ யார்?" என்றார்.

அப்போதுதான் இவருக்கு, தன்னுடைய குரு என்பது தெரிந்தது. உடனே காலிலே விழுந்து வணங்கினார்.

அத்வைதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்காக ஜகடபாதர் அரசர் ரசகுணனுக்கு எடுத்துக்கூறிய கதை இது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.விசாரணையை தமிழ்நாட்டில் நடத்த அனைத்து கட்சிகளும் குரல் எழுப்ப வேண்டும்

## பா.ம.க.நிறுவுநர் வலியுறுத்து



**(சென்னை) இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையை நடத்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்து விட்ட நிலையில் அந்த விசாரணையை தமிழ்நாட்டில் நடத்தவும் இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட உலகம் முழு வதும் தஞ்சமடைந்துள்ள தமிழர்களும் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளும் விசாரணையில் அச்சமின்றி பங்கேற் கவும் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காக 12 உறுப்பினர்கள் கொண்ட குழுவை ஐ.நா.மனிதவுரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை அமைத்திருக்கிறார்.

வசாரணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக ஐ.நாவின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான சான்ட்ரா பெய்தாஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கைப் போரில் ஒன்றரை இலட்சம் அப்பாவி தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி பெற்றுத்தருவதற்கான முயற்சிகளில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். இதை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது.

ஐ.நா. மனிதவுரிமை ஆணையரின் விசாரணை குழுவுக்கு ஒருங்கிணைப்பாளராக அமர்த்தப்பட்டுள்ள சான்ட்ரா பெய்தாஸ் மனிதவுரிமை தொடர்பான விசாரணைகளை கையாள்வதில் சிறந்த அனுபவம் கொண்டவராவார்.

உலக பொது மன்னிப்பு அவை உள்ளிட்ட மனிதவுரிமை அமைப்புகளில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இம்மாத மத்தியில் தொடங்கி 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மொத்தம் 10 மாதங்களுக்கு பெய்தாஸ் குழு நடத்தவிருக்கும் விசாரணையின் முடிவில் இலங்கைப் போர்க் குற்றவாளிகளின் பட்டியல் அடங்கிய அறிக்கை ஐ.நாவிடம் தாக்கல் செய்யப்படும் போர்க்குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்படுவர் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆனால், இந்த விசார ணையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் விசாரணைக்குழுவினரை இலங்கைக்குள் அனுமதிக்க முடியாது என்றும் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவைக்கான இலங்கையின் தூதர் ரவிநாத ஆரிய சின்ஹா அறிவித்துள்ளார்.


பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எந்த நியாயமும் கிடைத்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளது. அதனால் தான் ஐ.நா. அமைப்புக்கே சவால் விடும் வகையில் விசாரணையை அனுமதிக்க முடியாது என்று மிகவும் திமிருடன் அறிவித்திருக்கிறது.

இலங்கையில்நாட்டையும்இழந்து, உரிமைகளையும் இழந்த தமிழர்கள் தங்களது உறவுகள் கொல்லப்பட்டதற்காவது நீதி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

மத்தியில் இதுவரை ஆட்சி செய்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டு வந்த நிலையில், மத்தியில் புதிதாக பதவியேற்றுள்ள நரேந்திர மோடி தலைமையிலான அரசு தங்களுக்கு நீதி வழங்கும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் நம்புகின்றனர்.

எனவே, இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரண்ணயை கொழும்பில் நடத்த இலங்கை ஜனாதிபதி மறுத்துவிட்ட நிலையில், அந்த விசாரணையை தமிழ்நாட்டில் நடத்தவும் இலங்கைப் போரில் பாதிக்கப்பட்டு உலகம் முழுவதும் தஞ்சமடைந்துள்ள தமிழர்களும் தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளும் விசாரணையில் அச்சமின்றி பங்கேற்கவும் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

இதற்காக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும் என அவர்அதில் கூறியுள்ளார். (2)



உத்திர பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் வைத்து சந்தித்து கலந்துரையாடு வதைப் படத்தில் காணலாம்.

## முஷாரப் வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி

(கராச்சி)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் வெளி நாடு செல்ல அந்நாட்டு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

வெளிநாடு செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளோர் பட்டியலில இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என சிந்து உயர் நீதி மன்றத்தில் முஷாரப் மனுதாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகள் முகமது அலிமஸர், ஷாநவாஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு முஷாரப் வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை தளர்த்தி உத்தரவிட்டது.

நோய்வாய்ப்பட்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் சிகிச்சை பெற்றுவரும் முஷாரப்பின் தாயை பார்ப்பதற்கு அனுமதி அளிக்கும் விதமாக மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்த நீதிமனறம், இது தொடர்பாக மேல்முறையீடு செய்வதற்கு அரசுக்கு 15 நாட்கள் அவகாசம் அளிப்பதாகவும் தெரிவித்தது.

இதனிடையே, லால் மஷித் அப்துல் ரஷித் காஸி கொலை தொடர்பாக இஸ்லாமாபாத் சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக விலக்கு கோரிய முஷாரப்பின் மனு வியாழக்கிழமை தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த வழக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி விசாரணைக்கு வரும்போது முஷாரப் ஆஜராக வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.


முஷாரப் மீது தேச துரோக குற்றச்சாட்டு, முன்னாள் பிரதமர் பேனசீர் புட்டோ மற்றும் பலூசிஸ் தான் முன்னாள் பழங்குடியினத் தலைவர் அக்பர் புக்தி ஆகியோர் கொலை உட்பட பல்வேறு வழக்குகள் உள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

## குண்டுவெடிப்புக்களை நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி அமைந்துள்ளதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் குண்டு வெடிப்புகளை நடத்த தீவிரவாதிகள் திட்டமட்டு இருப்பதை உளவுத்துறை கண்டுபிடித்துள்ளது.

வாரணாசி, மதுரா, அயோத்தி ஆகிய நகரங்களில் இந்து மத வழிபாட்டுத் தலங்கள் அதிகம் உள்ளன. எனவே இந்த மூன்று நகரங்களிலும் பெரிய அளவில் குண்டுவெடிப்புக்கு தீவிரவாதிகள் குறி வைத்துள்ளனர்.

இதன் மூலம் 3 நகரங்களிலும் வன்முறையை உருவாக்க தீவிரவாதிகள் சதி செய்துள்ளதாக உளவுத்துறை கூறியுள்ளது.



இது தவிர சுதந்திர தின கொண்டாட்டத்தின் போதோ அல்லது அதற்கு முன்போ தலைநகர் டில்லியில் மிகப் பெரிய குண்டுவெடிப் புக்கு தீவிரவாதி கள் சதி திட்டம் தீட்டி உள்ளதையும் உளவுத்துறை மோப்பம் பிடித்துள்ளது.

உளவுத்துறை எச்சரிக்கையைத் தொடர்ந்து மத்திய அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக மத்திய உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங் நேற்று முன்தினம் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

டில்லி, மதுரா, அயோத்தி, வாரணாசி ஆகிய 4 நகரங்களிலும் பாதுகாப்பை அதிகரிக்க உத்தர விட் டார். அதன் பேரில் 4 நகரங்களிலும் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாகன சோதனை மற்றும் கண்காணிப்பு பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.(2)

## ஈராக் முக்கிய நகரங்களை கைப்பற்றி தீவிரவாதிகள் முன்னகர்வு

# பக்தாத்தில் பதற்றம்



(பக்தாத்)

ஈராக்கின் முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ள தீவிரவாதிகள் தலைநகர் பக்தாத்தை நோக்கி முன்னேறுவதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஈராக்கில் அல் கொய்தா ஆதரவு தீவிரவாதிகளுக்கும் அந்நாட்டு இராணுவத்திற்கும் நடைபெற்று வரும் உள்நாட்டு போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

வடக்கு ஈராக்கில் முன்னாள் ஜனாதிப்தி சதாம் உசேனின் சொந்த ஊரான திக்ரித் உட்பட 5இற்கும் மேற்பட்ட முக்கிய நகரங்களை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

நாட்டின் தலைநகரான பாக்தாத்தை கைப்பற்றும் திட்டத்துடன் தொடர்ந்து முன்னேறும் தீவிரவாதிகள் பக்தாத்திலிருந்து 60 மைல் தூரத்திலுள்ள உத்ஹைன் நகரை தங்கள் வசமாக்கியுள்ளனர்.

வடக்கு ஈராக்கிலிருந்த பல்வேறு இராணுவ முகாம்களையும் ஆக்கிரமித்துள்ள தீவிரவாத படையினர் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களையும் சிறைப்பிடித்துள்ளனர். இராணுவ வீரர்கள் கைதிகளாக பிடித்துச் செல்லப்படும் காட்சிகள சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

தீவிரவாதிகள் எந்த நேரத்திலும் பக்தாத் மீது தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்பதால் பதிலடி கொடுக்க ஈராக் இராணுவம் தயாராகி வருகிறது. தீவிரவாதிகளின் கை தொடர்ந்து ஓங்கிவருவதால் ஈராக் இராணுவத்திற்கு ஆதரவாக அமெரிக்க படைகள் களமிறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக்கிற்கு உதவுவதற்கான அனைத்து வழிகளையும் ஆய்வு செய்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஈராக் நிலரவம் குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலும் அவசரமாக கூடி ஆலோசனை நடத்தி உள்ளது. அல் கொய்தா ஆதரவு தீவிரவாதிகள் சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் என்பதால் பக்தாத்தில் அதிக அளவு வசிக்கும் ஷியா பிரிவு இஸ்லாமியர்கள் அவர்களுக்கு எதிராக களமிறங்குவார்கள் என தெரிகிறது.

கடந்த 2006,2007ஆம் ஆண்டுகளில் இரு பிரிவினருக்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். இதனால் மீண்டும் அது போன்ற மோதல் நடைபெற்று விடாமல் தடுக்க ஈராக் அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. தீவிரவாதிகள் வசமாகியுள்ள மோசோல் உள்ளிட்ட நகரங்களை மீட்க வான் வெளி தாக்குதல்களையும் ஈராக் படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி அறிவியல் நகர் நோக்கிய விவசாய பீடத்தின் நகர்வு



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 54-I

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் சம்பிரதாய பூர்வமாக அதற்கென உரிய நிலத்தில் இன்று கிளிநொச்சி அறிவியல் நகரில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவால் திறந்து வைக்கப்படுகின்றது.

இப்பீடத்திற்கென்றொரு வரலாறு உண்டு. அதனுடன் இதற்கொரு வரலாற்றுக் கடமையும் உண்டு. வெறுமனே கல்வி கற்பித்தலிலும் ஆராய்ச்சி செய்வதிலும் மட்டுப்படுத்தப்பட்ட உயர்கல்வி நிறுவனமல்ல இது. அதனையும் தாண்டி வடபகுதி மக்களுக்கென விவசாயம், கால்நடை, மீன்பிடி மற்றும் இங்குள்ள வளங்கள் அனைத்தையும் பேணிப்பாதுகாப்பதிலும் தொழிற்றுறையை மேம்படுத்துவதற்குமாக உருவாக்கப்பட்ட விவசாய பீடம் 1990 இல் முன்னைநாள் துணை வேந்தர் பேராசான் அழகையா துரைராசாவினால் விவசாய திணைக்களத்தின் பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தின் சில கட்டடங்களில் தற்காலிகமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

எந்த விதமான சொந்த கட்டடங்களுமின்றி குடில்களிலும் இரவல் கட்டடங்களிலும் இயங்கிய விவசாய பீடம் இரணைமடு சந்தி நோக்கிய இராணுவ நடவடிக்கை காரணமாக கரிப்பட்ட முறிப்புக்கு இடம்மாறி மேலும் மாறமுடியாத நிலையில் அனைத்தையும் அப்பகுதியிலேயே விட்டுவிட்டு யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்தது.

கிளிநொச்சியிலிருந்து இடம்பெயந்தாலும் விவசாய பீடத்தை மனமார வரவேற்ற பெருமை மருத்துவ பீடத்திற்கே சாரும்.

வழியின்றி வந்த பீடத்திற்கு அப்போதைய மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி பிரசாத் விரிவுரைகளையும் ஆய்வு கூடங்களையும் தற்காலிகமாக ஆரம்பிக்க நம்பிக்கை தந்தார். இதன் மூலம் விவசாய பீடம் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்தாலும் இற்றைவரை வசதிகளால் குறைந்தே காணப்பட்டது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல இன்னல்களை தாங்கி இப்பீடத்தில் வாழ்ந்தார்கள் என்பது பொருந்தும். முதல் பீடாதிபதி பீடத்திற்கு வரமுன்னரேயே மரணித்துவிட்டார்.

அதன்பின்பு பேராசிரியர்கந்தையா, பேராசிரியர் நவரட்ணராஜா, பேராசிரியர் மோகன தாஸ், எந்திரி விஜயரட்ணம், பேராசிரியர் இராசதுரை என பலர் பீடாதிபதிகளாயிருந்து சேவைகள் புரிந்துள்ளனர்.

எழுதும் இக்கைகளுக்கும் ஒன்றரை வருடங்கள் பீடாதிபதியாக பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது. ஒன்றரை வருடங்களாயினும் பீடத்தை கிளிநொச்சிக்கு நகர்த்தும் ஆரம்ப வேலைகளில் திட்டமிடவும் அதுசார்ந்து முழுமையாக ஈடுபடவும வசதி கிடைத்தது.

எவ்வளவு காலம் கதிரையில் இருக்கின்றோம் என்பது முக்கியமல்ல மாறாக என்ன செய்தோம் என்னும் முதியோர் வாக்கை பரீட்சித்துப்பார்க்க வாய்ப்பாகவும் இருந்தது.

இதுவரையிலும் விவசாய பீடம் என்ன சாதித்ததென்றால் விவசாய பட்டதாரி மாணவர்களை உருவாக்கியிருக்கின்றது. இதைவிட விவசாயிகளுக்கென அறிவுப்பசியை தீர்க்க முயற்சித்திருக்கின்றது. வாசல் தேடிவந்து உதவி கேட்கும் விவசாயிகளுக்கு தீர்வு தர முயற்சித்திருக்கின்றது. அவர்களது பிரச்சினைகளை ஆய்வுக்குட்படுத்தி அதற்கான தீர்வினை மாணவர்களின் ஆராய்ச்சி மூலமும் தமது ஆய்வின் மூலமும் கண்டறிந்திருக்கின்றது.

போர் முடிந்து இன்றைக்கு 5 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் நாம் இனி வாழ்வாதார முன்னேற்றத்திற்கான வழிவகைகளை ஆய்வு மூலமும் அறிவை பெருக்குவதன் மூலமும் கண்டறிவதோடு தொழிற்றுறை விருத்திக்கும் நாம் இனி முன்னின்று முயற்சிக்க வேண்டும்.

இதற்காக தொழில்நுட்பத்தை உள்வாங்கிய புதிய பட்டப்படிப்பு விவசாய பீடத்திலும் அறிமுகப்படுத்தப்படுகின்றது. 2016 இல் செயற்பாட்டுக்கு வரும் வகையில் இப்பட்டப்படிப்பு தயாராகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கேற்ப உருவாக்கப்படுவதால் இது 2016 இல் செயற்பாட்டுக்கு வரும்.

வடபகுதியின் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் மீன்பிடி தொழிற்றுறையினுள் உள்வாங்கப்படுவோரை மையப்படுத்தி விவசாயபீடம் இன்னும் உழைக்க தலைப்பட்டிருக்கின்றது எனலாம். விவசாய பீடத்தின் கிளிநொச்சி நோக்கிய நகர்வு வடபகுதியில் புதிய அத்தியாயத்தை உருவாக்க வேண்டும்.


வடபகுதியில் உருவாகும் தொழிற்றுறைக்கான தரத்தை நிர்ணயிக்கும் ஆய்வு கூடங்களை கொண்டு விவ சாயிகள் தொழில்புனைவோர் என பலருக்கும் நன்மை பயக்கும் வகையில் செயற்பாடுகள் முடுக்கிவிடப்படும் எனவும் நம்பலாம். விவசாய பீடம் பொறியியல் பீடத்துடனி ணைந்து தொழிற்றுறை வளர்ச்சிக்கு பாடுபடவேண்டும். இது எம் மக்கள் கொண்ட எதிர்பார்ப்பு. இதனை நடைமுறைப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும்.

விவசாய பீடத்தில் இருந்து கல்விகற்று வெளியேறிய பட்டதாரி மாணவர்கள் பரவலாக பல இடங்களில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரிகின்றார்கள். இவர்களனைவரையும் ஒன்றிணைத்து விவசாயபீடத்தின் அத்திபாரத்தை வலிமையுள்ளதாக்கி அனைவரும் எதிர்பார்க்கும் உலக தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்திற்கான நிலைக்கு நாம் முன்னேற உங்கள் அனைவரதும் பங்களிப்பையும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தற்போதய துணைவேந்தர் பேராசிரியைவசந்தி அரசரட்ணம் காலத்தில் விவசாய பீடத்திற்கு இவ்வாறாக புதிய பாதையும் புதிய இடமும் வசதி வாயப்புக்களும் கிடைத்தமைக்கு அனைவரும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கின்றோம்.

பல்கலைக்கழக சமூகத்தின் வேண்டுகோளுக்கிணங்க இவ்விடத்தினை கல்வியின் விருத்திக்காக சிபார்சு செய்து பெற்றுக் கொடுத்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு பல்கலைக்கழகம என்றும் நன்றிக்கடன் பட்டிருக்கின்றது. கேளுங்கள் தரப்படும் தடடுங்கள் திறக்கப்படும் எனும் வாசகம் இங்கும் பலமாக ஒலிக்க வேண்டும.

அறிவியல் நகர் என்ன தேவைக்காக உருவாக்கப்பட்டதோ அந்த குறிக்கோளை நோக்கி நாமனைவரும் செயற்பட வேண்டும். மக்களின் அறிவுப்பசிக்கு தீனி போடும் இடமாக மிளிரவேண்டும். எமது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கிணைவாக விவசாய பீடம் முன்னின்று செய்ற்படும் என நாம் இந்நாளில் உறுதி பூணுவோமாக.




# ஐ.நா.குழுவினால் அரசின் அனுமதியின்றி விசாரணையை முன்னெடுக்க முடியாது

## மனிதவுரிமைகள் சட்டத்தரணி தெரிவிப்பு

**அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் ஐ.நா. குழுவினால் எந்தவொரு விசாரணையையும் இலங்கையில் முன்னெடுக்க முடியாதென மனிதவுரிமைகள் சட்டத்தரணி பிரதீப மஹா நாம தெரிவித்துள்ளார்.**

ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை, நியூசிலாந்தைச் சேர்ந்த சர் வதேச சட்டத்தரணியான டேம் சில் வியா கார்ட்ரைட் தலைமையிலான குழுவை இலங்கையில் மோதல் காலத் தில இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமித்துள்ளார.

இந்த விசாரணைக் குழுவானது உண்மையில் முன்னாள் புலி உறுப்பினர்களும் புலி ஆதர வாளர்களுமான தமிழ் டயஸ் போராக்கள் நிறைந்து வாழும் கனடா, பிரித்தானியா ஆகிய நாடு களில் முன்னெடுக்கப்பட வேண்டியதொன்று எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விசாரணைக் குழுவினால தயாரிக்கப்படும் இறுதி அறிக்கை 2015 ஆம் ஆண்டளவில் மனிதவுரிமைகள் உயர்ஸ்தா னிகரிடம் கையளிக்கப்படவுள்ளது. சில அரசியல வாதிகள் கூறுவது போல் இறுதி அறிக்கைக்கும் பொருளாதாரத் தடைக்கும் எவ்வித தொடர்புமில்லை.

இதேவேளை, இறுதியறிக்கை ஐ. நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படும்வேளை அதன் ஆணையாளராக நவநீதம்பிள்ளை பதவி வகிக்கமாட்டார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் இவரது பதவிக்காலம் முடிவுக்கு வருகி

தெனவும் மஹா நாம தெரிவித்தார.

ஐ.நா. வட்டாரங்களிலிருந்து தெரிய வருவது போல ஐ.நாவுக்கான ஜோர்டான் நாட்டின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான இளவரசர் செயிட் ராட் செயிட் அல் ஹுசேன் மனிதவுரிமைகள் ஆணையாளராக தெரிவாகும் பட்சத்தில் விசாரணை செயற்பாடுகளில் இலங்கைக்கு சாதகமான முடிபுகள் கிட்டுமெென எதிர் பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

'அநேகமான அரபு நாடுகள் பயங்கரவாதத்தின் கொடூரத்தை நன்கு அறிந்தவர்கள். அந்நாட்டைச் சேர்ந்தவர்களால் பயங்கர வாதத்தின் கொடூரம் மற்றும் அவை சமாதானம், நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஏற் படுத்தும் தாக்கம் குறித்து நன்கு உணரக்கூடிய தாகவிருக்கும்.

எனவே, புதிதாக தெரிவாகவிருக்கும் ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் இலங்கையின் நல்லிணக்கத்திற்கு ஆதரவு நல்கும் வகையில் தமது செயற்பா டுகளை முன்னெடுப்பார் என நம்புவதாக அவர் தெரிவித்தார். (2)

# அலுக்கோசு பதவிக்கு பெயர்மாற்றம்

## சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிப்பு

இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றுகின்றவரை இதுவரை காலமும் அழைக்கப்பட்டு வந்த அலுக்கோசு என்ற பெயர் தற்போது மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது குறித்த பதவிக்கான பெயரானது "உயிர் எடுப்பவர்" எனறு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக கப்படுகிறது.

சிறைச்சாலைகள் திணைக்களம் அலுக்கோசு என்ற பெயருக்கு பதிலாக புதிய பெயர்களை பிரேரிக்குமாறு கோரியிருந்தது. அதனடிப்படையில் மக்களிடமிருந்து 200 பெயர்கள் கிடைக்கப்பெற்றன.

சிறைச்சாலைகள் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் கண்காணிப்பின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவினர, அந்த பெயர்களில் இருந்து உயிர் எடுப்பவர் என்ற பெயரைத் தெரிவு செய்துள்ளனர்.

நபரொருவரை தூக்கிலிடும் அதிகாரியின் பதவிக்கு அலுக்கோசு என்ற பெயர்கொண்டு அழைக்கின்ற போது அவரின் பதவிக்கும் அவருக்கும் ஏற்படுகின்ற அபகீர்த்தியை ஒழிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (2)

## முன்னோடிக் கருத்தரங்கு

இலங்கை சப்ரகமுவா பல்கலைக்கழகத்தின் நான்கு வருட விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்புக்களான BSc.Special in Sport Sciences & Management, BSc.Special in physical Education ஆகியவற்றிற்கு பல்கலைக்கழக விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்த மாணவர்களிற்கான உளச்சார்புப் பரீட்சைகள் எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறவுள்ளன.

மேற்படி உளச்சார்புப் பரீட்சைகளுக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் காலை 9 மணியளவில் இடம்பெறும்.

எனவே, பல்கலைக்கழக விண்ணப்பப் படிவத்தில் மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு சப்ரகமுவா பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகு பீடத்தினர் கேட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் சிறுவர் உழைப்பிற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு

(குருமன்காடு)



சிறுவர் உழைப்பிற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு தேசிய ரீதியாக கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நாளை ஞாயிற்றுக் கிழமை வரை அனுஸ்டிக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் உழைப்பிற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு புதன்கிழமை(11) இடம்பெற்றது.

இதன்போது, சட்டத்தின் படி 14 வயதிற்கு குறைந்த சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்த முடியாது அவ்வாறு தொழிலுக்கு அமர்த்துவோருக்கு எதிராக 12மாத கால சிறைதண்டனை வழங்க முடியும்.

14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களை சில சந்தர்ப்பங்களில் வேலைக்கு அமர்த்த வேண் டிய சூழ்நிலை ஏற்பட்டால் அவர்களின் கல்வி, ஒழுக்கம் போன்றவற்றிற்கு அல்லது அவர்களின உடல் அல்லது உள பாதிப்புக்களை ஏற்படுத்தும் தொழிலினை வழங்க முடியாது எனவும் வலியுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறுவர்கள உழைப்பிற்கு எதிரான விழிப்புணர்வு கையேட்டினை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கினார். (9-250)



பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஆக்கத்திறமைகளை மதிப்பிடும் தேசிய விருதுக்கான கவிதா ஆற்றல் 2013-2014 இறுதிப் பெரும் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இதில் மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த சிவகுமாரன் ஜனகன் தமிழ்மொழி மூல சிறுகதைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை பெற்று அதற்கான விருதினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

சிங்கள- தமிழ் இரு மொழிமூல மாணவர்களிடையே நடைபெற்ற புகைப்படப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று அதற்கான பரிசினை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார விடமிருந்து பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தும் சிறுவர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில கிராமங்களைச்சேர்ந்த சிறுவர்கள் மோட்டார் சைக்கிளை விதிமுறைகளை மீறி செலுத்தி வருவதனால் விபத்துக்கள் இடம்பெறக்கூடிய சூழல் உருவாகியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக செல்வநகர், அம்பாள்குளம், ஆனந்தநகர் போன்ற கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்களே இவ்வாறு மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கின்றனர்.

ஒரு மோட்டார்சைக்கிளில் பலர் தலைக் கவசமின்றி மிக வேகமாகப் பயணிக்கின்றனர்.

இந்நிலையில் விபத்துக்கள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

அத்தோடு வீதிகளில் செல்லும்போது ஏனைய வாகனங்களையும் கவனிக்காது போக்குவரத்து விதிகளை மீறி பயணிக்கின்றனர்.

எனவே பெற்றோர்கள் இது தொடர்பில் கவனமெடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-271)

# பெண்களுடன் முரண்பட்ட வயோதிபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்

(மல்லாவி)

திருமுறிகண்டி, இந்துபுரம் பகுதியில் பெண்கள் மீது தவறான வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டு, சங்கிலியினால் தாக்கு தல் மேற்கொண்டும் வந்த வயோதிபரை திருமுறிகண்டிப் பகுதியில் வைத்து கடந்த வாரம் மாங்குளம் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ பிணையில் விடுவித்துள்ளனர்.

குறித்த வயோதிபரின் இச் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

எனினும் வயோதிபர் தலை மறைவாக வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில் கடந்த வாரம் திருமுறிகண்டிப் பகுதியில் மறைந்திருந்த வேளையில் பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

தற்போது குறித்த நபரை பொலிஸ் பிணையில் விடுவித்துள்ள மாங்குளம் பொலிஸார் எதிர்வரும் 19 ஆம் திகதி முல்லை. மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர். (9-15)




# கட்டாக்காலிகளால் நெற்பயிர்கள் சேதம்

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திட்டத்தின் கீழ் விதை நெல் தேவைக்கென வட்டக்கச்சி விவசாய பண்ணைக்கு அருகாமையில் காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறாக செய்கை பண்ணப்பட்ட நெற்பயிரை பெருமளவிலான கட்டாக்காலி மாடுகள் சேதப்படுத்தி வருகின்றன.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இக் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துமாறு 4 ஆம் வாய்க்கால் கமக்கார அமைப்பிலும் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

விதை நெல் தேவைக்காக மேற்கொள் ளப்பட்ட பயிர்ச்செய்கையை பாதுகாப்பதற்குரிய எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமையால் பாரிய நட்டத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக இரணைமடு விவசாய சம்மேளனத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்படடோர் பயிர்ச் செய்கையை நாசம் செய்யும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-254)

# சேக்கிழார் விழா

(குருமன்காடு)

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் ஏற்பாட்டில் சேக்கிழார் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீசிந்தாமணி ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் செ.துரைராசா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்விற்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன், கௌரவ விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

இந் நிகழ்வில் சான்றோர் கௌரவமும் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (9-250)



வடமாகாண சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரம் கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் கடந்த புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது மாணவியொருவர் மரக்கன்று நாட்டுவதை படத்தில் காணலாம்.

# செயலமர்வு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வியமைச்சினால் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் இணைப்பாளர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ரி.டி.எச் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இச் செயலமர்வில் முன்பள்ளிகளில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளதால் குறித்த நபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (9-15)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்களுக்கு குடியியல் ஆவணங்கள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கின் இறுதி நாட் கருத்தரங்குகள் நாளை மறுதினம் திங்கட் கிழமை இரண்டு நாட்கள் நடைபெறவுள் ளதாக பிரதேச செயலர் எஸ்.குருபரன் தெரிவித்துள்ளார்.

யு.என்.எச்.சி.ஆர் அனுசரணையுடன் இடம் பெற்ற இக் கருத்தரங்கு கடந்த மார்ச் மாதம் முதல் ஆரம்பமாகி 16 நிலையங்களில் இடம் பெற்றுள்ளது.

இதன்படி இறுதி விழிப்புணர்வு கருத்தரங்குகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிக்கு கனகரத்தினபுரம் பொது மண்டபத்திலும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு பண்டார வன்னியன் பொதுநோக்கு மண்டபத்திலும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு ஒட்டுசுட்டான் பொது நோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (9-15)

# நிலக்கடலை பயிரின் புதிய தெரிவுகள் செய்கை பண்ணப்படவுள்ளன

(கிளிநொச்சி)

முல்லை, கிளிநொச்சி மாவட்டங்களில் நிலக்கடலை பயிரில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட தெரிவுகள் விவசாயிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப் படவுள்ளதாக வடபிராந்திய மேலதிக விவசாய பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குறித்த மாவட்டங்களில் நிலக்கடலை பெரியளவில் பயிரிடப் பட்டு வருகின்றன.

இவ்வாறாக பயிரிடப்படுகின்ற இனங்களில் பல தரப்பட்ட கலப்புக்கள் காணப்பட்டமையால் இவ்வினத்தை தூய்மைப்படுத்தலுக்கான ஆராய்ச்சி இரணைமடு சந்தியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினரால் கடந்த 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதன்பயனாக மூன்று இனங்கள் அதே சுவையுள்ளதாக தெரிவாகி யுள்ளன.

இவை ஏனைய இனங்களை விட அதிக விளைச்சலை தரக் கூடிய தாகவும் உள்ளதால் விவசாயிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப் படவுள்ளது என்றார். (9)

# அரும்பு சஞ்சிகை வெளியீடு

(பூநகரி)

கிளி/பூநகரி ஞானிமடம் அரசதமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் அரும்பு சஞ்சிகை வெளியீடும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற வுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி த.கனகசபை தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி/வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்ளவுள்ளார். (9-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு வாய்ச்சால் கிழவியும் பாடுவாள்
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் சமய சோடனைகளைத் தடுக்கவேண்டும்

இங்கு நாம் குறிப்பிடுவது மதவாத நோக்கம் கருதியோ அன்றி எங்கள் மாணவர்களிடத்து மதவாத சிந்தனையைத் தூண்டிவிடும் எண்ணத்திலோ அல்ல என்பதை சத்தியக் கூற்றாக முதலில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேநேரம் யானையைப் பார்த்த குருடரைப் போல எம்மைப் பார்த்தால் என் செய்வோம் என்பதையும் சொல்லித்தானாக வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெசாக் பண்டிகையின் கொண்டாட்டம் ஒவ்வொரு மாதப் பௌர்ணமியிலும் நடைபெறும்போல் தெரிகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்ள வந்த பௌத்த சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகம், பல்கலைக்கழகக் கட்டிடங்கள் இவற்றையும் கடந்து திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி உள்ளிட்ட இடங்களில் வெசாக் பண்டிகைக்குரிய சோடனைகளை செய்திருப்பது,

இந்த மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்ளுதல் என்ற போர்வையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பௌத்த மயத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டவர்கள் என்பது தெளிவாகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்று என்பதில் எந்த மறுப்பும் கிடையாது.

அதேநேரம் சைவப்பெருவள்ளல் சேர் பொன். இராமநாதன் அவர்களால் வழங்கப்பட்ட இப் பல்கலைக்கழகக் காணி, பரமேஸ்வராக் கல்லூரிக்குரியது என்பதும் இங்கு பரமேஸ்வரப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஒரு சைவ ஆலயம் இருக்கிற இடத்தில் பௌத்த கலாசார அலங்காரங்களை செய்வதென்பது ஆதிக்க வெறியின் அடையாளமாகும்.

அதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் மாணவர்கள் எவரும், பல்கலைக்கழக கட்டிடத்தில் சைவ, கிறிஸ்வத, இஸ்லாமிய நிகழ்வுகளை அனுஷ்டிக்கும் பொருட்டு சமயம் சார் சோடனைகளை செய்தது கிடையாது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத் துறை என்பது ஒரு முக்கியமான பிரிவாக இருந்த போதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டிப் பொங்கல் மட்டும் ஒரு சிறு இடத்தில் நடந்தேறும். அந்த அளவிற்கு சமயப் பண்டிகைகளுக்கு இடம்தராமல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நடந்து கொண்டனர். ஆனால் கடந்த ஒருசில வருடங்களில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ள வந்த பௌத்த சிங்கள மாணவர்கள் திட்டமிட்டு பௌத்த சமயத்தின் அனுட்டானங்களை யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

இத்தகைய செயல்கள் நீங்கள் பொங்கு தமிழ் நடத்தினால், உங்கள் உறவுகளை நினைவேந்தும் பொருட்டு தீபம் ஏற்றினால், நாங்கள் வெசாக் பண்டிகை கொண்டாடுவோம் என்றவாறு அமைந்திருப்பதைக் காணமுடியும்.

பௌத்த சிங்கள மாணவர்களின் பின்னணியில் முக்கியமானவர்கள் இருக்கிறார்களோ என்று சந்தேகம் கொள்வதில் நியாயம் இல்லாமல் இல்லை.

எதுவாயினும் இத்தகைய போக்குகள் தொடர்ந்தால் அது நிச்சயம் மாணவர்களிடையே ஒற்றுமையீனத்தை ஏற்படுத்தும் என்பதால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் எந்த சமய அனுட்டான சோடனைகளும் இடம் பெறக்கூடாது என்று கண்டிப்பான தடை உத்தரவை யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் பிறப்பிக்க வேண்டும்.

இல்லையேல், தமிழ் மாணவர்களின் எதிர்காலம் ஆபத்தானதாக இருக்கும் என்பது உண்மை.

# பொலிஸ் திணைக்களத்தில் பாரபட்சம் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு, கொழும்பு பயங்கரவாதத் தடைப்பிரிவு, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு ஆகியவற்றை சேர்ந்த 75 பொலிஸ் பரிசோதகர்கள், பதவி உயர்வு வழங்கப்படவில்லையென சிரேஸ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா பொலிஸ பரிசோதகர்கள் சார்பாக உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தார்.

பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர், நேர்முகப்பரீட்சை நடத்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவி உயர்வு பெற்ற 231 பொலிஸ் பரிசோதகர்கள் உட்பட 248 பேரை பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டு சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை சட்டத்தின்முன் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் 75 மனுதாரர்கள் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் குறிப்பிடப்பட்டதாவது,

நீதி நியாயம் சட்டரீதியான வகையில் பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்வு வழங்க மனுதாரர்களுக்கு சகல தகுதியிருந்தும், 75 மனுதாரர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களில் ஒரு எதிர் மனுதாரர் தண்டனை சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றினால் தண்டனை வழங்கப்பட்டவர்.

பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றாத உப பொலிஸ் பரிசோதகர் பிரதான பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சையில் சேவை மூப்புப் பட்டியல் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன், மனுதாரர்களை விடவும் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்கள்.

பொலிஸ் திணைக்களத்தின் ஒழுக்காற்று நடவடிக்கையில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சில எதிர் மனுதாரர்களும் பிரதான பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்த்தப்பட்டுள்ளர்கள் எனக் குறிப்பிடப்பட்டு இந்த மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நேற்றைய தினம் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ், நீதியரசர்களான சரத் ஆப்ரு, சிசிர ஆப்ரு ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மேலதிக விசாரணையை நீதியரசர்கள் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (எ-11)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையானது காரைநகர் மற்றும் கைதடி தொழிற்பயிற்சி நிலையங்களில் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்) மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்), கட்டிட நிர்மாண உதவியாளர் (மேசனறி), வீட்டுமின் இணைப்பாளர் (வயறிங்) ஆகிய கற்கைநெறிகள் இலவசமாக ஆரம்பிக்கவுள்ளது. இவ்வனைத்து கற்கைநெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ)சான்றிதமுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.வீதி, யாழ்ப்பாணம் அல்லது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலை, கைதடி தொழிற்பயிற்சி நிலையம் கைதடி என்னும் இடங்களில் எதிர் வரும் 30-ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ஏ)

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தால் கல்வி வலயங்களில் காணப்படும் ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை 1, 2-1 ஆகிய தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மேற்படி தரங்களைச் சேர்ந்தோரிடமிருந்து போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை 2-11ஐ சேர்ந்தோரும் கவனத்திற் கொள்ளப்படுவர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவங்களையும், அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்ப முடிவுத்திகதி 30.06.2014 ஆகும் என மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஏ)

# தமிழகத்துக்கும் டில்லிக்கும் வேறுபாடுகள் எவையுமில்லை

## வடக்கு முதல்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் தமிழக அரசுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்திற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படாதென நம்புவதாக வட மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அரசியல் ஸ்திர தன்மையில் தமிழகம் தொடர்புபட்டுள்ளதாக தி ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடனடித் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை மோடி நன்றாக அறிந்து வைத்துள்ளதாக வட மாகாண முதலமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் வட மாகாண சபை ஏன் எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை என இதன் போது கேள்வி எழுப்பப்பட்டபோது, ஆரம்ப காலத்தில் வட மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், பின்னர் கடல்சார் பிரச்சினைகள் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் கடற்றொழில் அமைச்சர் இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அதிக அக்கறையுடன் செயற்படுவதால், தாம் பின்நிற்பதாக அவர் குறிப்பிட்டார்.

தேவையேற்படும் பட்சத்தில், வட மாகாண சபை மீனவர்கள் பிரச்சினையில் தலையீடு செய்வதாக குறிப்பிட்ட சி.வி.விக்னேஸ்வரன், ஜனநாயக ரீதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படுவதில்லை என கூறினார். (எ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### தியானம்

படிப்பிற்கு முக்கியமானது ஞாபகசக்தி. நமது உடலில் ஏழு சக்கரங்கள் இருக்கின்றது. இதில் ஆறாவது சக்கரம் அக்ஞேயசக்கரம். நம் நெற்றிப்பொட்டில் புருவமத்தியில் இது இருக்கின்றது. அங்கேதான் ஞாபகசக்திக்குத் தேவையான Pitutary glands சுரக்கின்றது.

தினமும் காலையும் மாலையும் 7 மணிக்கு இந்தத் தியானம் செய்து வந்தால் ஞாபகசக்தி அதிகரிக்கும். படிப்பும் நன்றாக வரும்.

நாம் ஒருவிடயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். எவ்வளவுதான் படித்தாலும் கடின உழைப்பு இருந்தாலும் முயற்சி செய்தாலும் தெய்வத்தின் அருள் இல்லையென்றால் நாம் எதுவுமே செய்ய முடியாது.

தெய்வத்தின் அருள் வேண்டுமென்றால் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் மதிப்புத்தரவேண்டும். அப்போதே தெய்வத்தின் அருள் முழுமையாக எம்மை வந்தடையும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உண்மையை பின்பற்றுங்கள்



- இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்ய முயலுங்கள். அமைதியோடும், மன ஈடுபாட்டோடும் பணியில் ஈடுபடுங்கள்.
- கடவுளை நம் தந்தையாக ஏற்றுக் கொண்ட பிறகு, மற்றவர்களை சகோதரர்களாக கருதாமல் இருப்பது கூடாது.
- உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்லுங்கள். கோழையாகவும், கபடதாரியாகவும் இராதீர்கள்.
- எல்லா வகையிலும் விரிவடைய முயலுங்கள். உயிர்க்கு ஒரே அறிகுறியாவது வளர்ச்சி என்பதை நினைவில் வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்துக்கல்லூரியை வீழ்த்தியது கிளிநொச்சி மகாவித்தியாலயம்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நட்புரீதியான இப்போட்டியில் 17 வயதுப் பிரிவினர் கலந்து கொண்டிருந்தனர்.

50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இப்போட்டியில் நாணச்சுழற்சியில் வெற்றி பெற்ற கிளி- ம.வி.அணித் தலைவர் ஜெ.விதுசன் முதலில் துப்பாட்டத்தை தீர்மானித்தார்.

இதன்படி முதலில் ஆடிய அந்த அணி 41.1 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

கிளி.ம.வி. சார்பாக இ.பேபிசன் அதிரடியாக ஆறு ஆறு ஓட்டங்கள் நான்கு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 58 ஓட்டங்களையும் ஜெ.கஜீபன் 45 ஓட்டங்களையும் மு.நிதுசன் 31 ஓட்டங்களையும் ஜெ.விதுசன் 27 ஓட்டங்களையும் அதிகமாக பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பாக ஜோய் நிசான் 4, தனுசன் 2, விதுசன் 2, துவாரகன்1, கலைச்செல்வன் 1என இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு 224 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு ஆடிய யாழ். இந்துக்கல்லூரி அணி 46.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

துடுப்பாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பாக ஜோய் நிசான் அதிரடியாக மூன்று, ஆறு, எட்டு, நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 64 ஓட்டங்களையும் வழுதி 17 ஓட்டங்களையும் கலைச் செல்வன் 14 ஓட்டங்களையும் துவாரகன் 13 ஓட்டங்களையும் கிருதகணேஸ் 12 ஓட்டங்களையும் அதிகமாக பெற்றனர். பந்து வீச்சில் கிளி.ம.வி. சார்பாக ஜ.மிதுசன் 4, ச.ரவிப்பிரகாஸ்2, துசாந்தன் 1, மு.நிதுசன் 1, இ.பேபிசன் 1, ய.கஜீபன் 1 என இலக்குகளை வீழ்த்தினர்.

## குரு,சுரேஷ் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

அமரர் குரு,சுரேஷ் ஞாபகார்த்த வடமாகாண ரீதியான மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி இம் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

8 பேர் 7 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட இப்போட்டி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். போட்டிக் கட்டணம் ஆயிரம் ரூபா ஆகும்.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 0774016834, 0750408398 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாட்டத்திற்கு தகுதி பெறும் இரு அணிக்கும் கேடயமும் பணப் பரிசும் வழங்கப்படும்.

# தெல்லிப்பழை யூனியன் வெற்றி



ஜே.பி.எல். பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியை 6 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டது.

நாணயற்சுழற்சியில் வென்ற தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி முதலில் களத்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் மதுஷன் 35 ஓட்டங்களையும் ராஜகாந்தன் 31 ஓட்டங்களையும் கணாதப்ன் மற்றும் ஜனர்த்தன தலா 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியின் பிரதீபன் 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சுஜந்தன் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ரகுபதி, மற்றும் சிந்தாகரன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 148 ஓட்டங்கள் என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 149 ஓட்டங்களை பெற்றது.

இதில் தயாளன் 39 பந்துகளில் 58 ஓட்டங்களையும் டன்சயன் 19 ஓட்டங்களையும் சுஜந்தன் 18 ஓட்டங்களையும் சதீஷ்கண்ணா 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் ராஜ்காந்தன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் ரவிசங்கர் மற்றும் பிரதீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் அதிரடியாக 58 ஓட்டங்களை பெற்ற தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணியின் தயாளன் தெரிவானார். (க-23)


## வடமாகாண அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ்.மாவட்ட அணி சம்பியன்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியினை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதியது.

நான்கு பாதிகளைக் கொண்ட இந்த இறுதிப்போட்டியில், யாழ். மாவட்ட அணி 16:01, 17:02, 12:04, மற்றும் 15:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மாகாணச் சம்பியனாகியது. (க)



விளையாட்டு அமைச்சினால் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான கராத்தே காட்டா மற்றும் சண்டைப் போட்டி அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர் தர பாடசாலை மாணவி எஸ்.சிந்துஜா காட்டா சண்டைப் போட்டி இரண்டிலும் முதலிடம் பெற்றும் தங்கப் பதக்கத்தையும் தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை மாணவிகளான பி.தேனுகா சண்டைப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் காட்டாவில் வெள்ளிப் பதக்கத்தையும் பி.துவாரகா காட்டா சண்டையிடுதல் இரண்டிலும் வெள்ளிப் பதக்கம் பெற்றார். இவர்கள் மூவரையும் படத்தில் காணலாம்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டிகள்

யாழ்.மாவட்ட தாச்சி சங்க அனுமதியுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் வைகறை அணியை எதிர்த்து சிந்து அணியும் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடை பெறும் மற்றொரு அரையிறுதிப் போட்டியில் வள்ளுவர் அணியை எதிர்த்து கண்ணகி அணி மோதவுள்ளது. (க)

யுவர் பிரண்ட் பவுண்டேசனால நடத்தப்படும் ஜப்னா பிரிமியர் லக்கின் இரண்டாம் பருவகாலத்திற்கான போட்டிகளில் இன்று காலை 8 மணிக்கு திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து மதியம் 11 மணியளவில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மூளாய் விக்டெரி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு ஸ்டான்லி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

# ஜொலிஸ்ரார் வெற்றி



ஜே.பி எல். பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மூளாய் விக்டரி விளையாட்டுக்கழக அணியை 60 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

நாணயற்சுழற்சியில் வென்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் மதுஷன் 50 ஓட்டங்களையும் சைலேஷ்வரன் 49 ஓட்டங்களையும் மணிவண்ணன் 35 ஓட்டங்களையும் பார்த்தீபன் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணியின் பிரஷாந் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் சிந்துஜன் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சுரேந்திரன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 202 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களையே பெற்றது.

இதில் சுரேந்திரன் 31 ஓட்டங்களையும், கஜேந்திரன் 23 ஓட்டங்களையும், நிதர்ஷன் 16 ஓட்டங்களையும் ஜோயல் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் சைலேஷ்வரன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வாமனன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் நிருஜன், மணிவண்ணன், மதுஷன மற்றும் பார்த்தீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் அதிரடியாக 49 ஓட்டங்களையும் பந்துவீச்சில் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை கைப்பற்றிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியின் சைலேஷ்வரன் தெரிவானார். (க-23)

# மானிப்பாய் இந்து வெற்றி

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான 15 வயதுப் பிரிவு அணிக்கிடையிலான போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் படி முதலில் துடுப்பாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 35 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபிஷாந் 57 ஓட்டங்களையும் ரொஷான் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக துசிந்தன் 4 விக்கெட்களையும் பிரிஷோத் 3 விக்கெட்டுக்களையும் கிதுஷன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 184 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 47.1 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் திவாகர் 55, பிரிஷோத் 18, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக லோஜீதரன் 3, விக்கெட்களையும் ஜெசூரன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். இதன் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி இப்போட்டியில் 1 விக்கெட்டினால் வெற்றி பெற்றது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கால்பந்தாட்டம் பிரேஸில் அபார வெற்றி

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரின்குரோஷிய அணிக்கு எதிரான முதல் லீக் போட்டியில் போட்டியை நடத்தும் நாடான பிரேஸில் 3-1 என்ற ரீதியல் அபாரமான வெற்றியை பதிவு செய்தது

32 நாடுகள் பங்கேற்கும் உலகக்கிண்ண காலபந்தாட்டத் தொடரில் 64 போட்டிகள் நடைபெறவுள்ளன. சாவ் போலோவில் நேற்றுமுன் தினம்ஆரம்பமான முதல் போட்டியில் பிரேஸில் அணி வீரர் மார் செலோ





போட்டியின் முதல் பாதியின 11-வது நிமிடத்தில் ஒவ்ன் கோல் அடித்து அதிர்ச்சியளித்தார்

அதன்பின் போட்டியின் 29 நிமிடத்தில் பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் கோல் ஒன்றை பெற்று பிரேஸில் அணிக்கு ஆறுதலளித்தார். இதன்மூலம் போட்டியின் முதல் பாதி ஒன்றுக்கு ஒன்று என சம நிலை வகித்தது. இதையடுத்து போட்டியின் இரண்டாம் பாதியில் இரு அணிகளும் கோல் பெறுவதற்குமும்முரமாக முயன்றன

போட்டியின் 71-வது நிமிடத்தில் நெய்மர் பிரேஸில் சார்பாக இரண்டாவது கோலை பதிவு செய்து அணியை பலப்படுத்தினார். இந்நிலையில் போட்டியின் இறுதிநிமிடத்தில் பிரேஸில அணி வீரர் ஒஸ்கர் கோல் ஒன்றை பெற்று பிரேஸில் அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். இதன்மூலம் பிரேஸில் அணி குரோஷிய அணியை 3:1 என்ற ரீதியில் வெற்றிக் கொண்டது.

இதன் மூலம் பிரேஸில் அணி ஏ குழுவில் 3 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கின்றது பிரேஸில் ஐந்து தடவைகள் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கேமரூனை வென்றது மெக்ஸிகோ



பிரேசிலின் வடகிழக்கேயுள்ள நட்டால் நகரில் மழையிலே நடைபெற்ற ஒரு போட்டியில் கேமரூன் அணியை மெக்ஸிகோ 1-0 எனும் கோல் கணக்கில் வென்றது.

போட்டியின் இரண்டாவது பகுதியில் 61 ஆவது நிமிடத்தில், ஒரிபி பெராட்லா ஒரு கோல் அடிக்க மெக்ஸிகோ 1-0 என்று முன்னிலை பெற்றது.

பின்னர் அந்த நிலையை தக்க வைத்துக் கொண்டு வெற்றியும் பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மெக்ஸிகோ அணி மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளது.


எந்தவொரு உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியிலும் இதுவரை மெக்ஸிகோ, ஆபிரிக்க அணியொன்றை தோற்கடித்தது கிடையாது

இந்தப் போட்டியிலும் நடுவரின் முடிவு குறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

இடைவேளைக்கு முன்னர் மெக்ஸிகோ அணியினர் இரு முறை பந்தை கோல் வலைக்குள் அடித்தனர். எனினும் இரண்டையும் ஒப்-சைட் என்று கூறி நடுவர் நிராகத்துவிட்டார்.

இந்தப் போட்டிக்கு கொலம்பியா நாட்டின் வில்மார் ரோல்டான் களநடுவராக இருந்தார். (க)

## இலங்கை-இங்கிலாந்து டெஸ்ட் இரு அணிகளும் சிறப்பாட்டம்



இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் குவித்த இமாலய ஓட்டங்களுக்கு பதிலடியாக இலங்கை அணி முதல் இன்னிங்ஸைசிறப்பான முறையில் ஆரம்பித்துள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறும் இத்தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி நேற்று முன்திணம் முதல் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 2-ம் நாளில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஜோ ரூட்டின் சிறப்பான இரட்டைச் சதத்தின் உதவியுடன் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 575 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 200, மற் பிரையர் 86, பிளங்கெட் 39 ஓட்டங்களைஎடுத்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் பிரதீப் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு திமுத் கருணாரட்ன - கௌசல் சில்வா இணை சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இவர்கள் இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்காக 54 ஓட்டங்களை பகிர்ந்த போது கருணாரட்ண 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சங்கக்கார, களத்தில் நின்ற கௌசல் சில்வாவுடன் இணைந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடினார்.

இந்நிலையில் நேற்றைய 2-ம் நாள்ஆட்டம்நிறைவுக்குவரஇலங்கை அணி தமது முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 140 ஓட்டங்களை எடுத்துள்ளது. களத்தில் கௌசல் சில்வா 62, சங்கக்கார 32 ஓட்டங்களுடனும் உள்ளனர். இலங்கை அணி முதல் இன்னிங்ஸில்இங்கிலாந்துஅணியை விட435 ஓட்டங்களால்பின்னிலையில்உள்ளது.

இன்று போட்டியின் 3-ம் நாள் ஆட்டம் நடைபெறவுள்ளது. (க)

## இன்றைய போட்டி

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப்போட்டிகள் இடம் பெற்றுவருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ள போட்டிகள் வருமாறு:-

மாலை 5.50 மணிக்கு ஐக்கியம் ஏ விளையாட்டு கழகத்தை எதிர்த்து உதயசூரியன் பீ விளையாட்டு கழகமும் மாலை 6.30 மணிக்கு நாமகள் விளையாட்டு கழகத்தை எதிர்த்து உதயசூரியன் ஏ விளையாட்டு கழகமும் இரவு 7.10 மணிக்கு சென் நீக்கிலஸ் பீ விளையாட்டு கழகத்தை எதிர்தது காந்திஜி பீ விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (க-23)

## கடத்தப்பட்ட...

பர் 2010ம் ஆண்டு அல்பெடா என்ற மலேசிய சரக்கு கப்பல் சோமாலிய கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்டது.

அந்த கப்பலில் இலங்கையைச் சேர்ந்த 6 பேர் உட்பட 23 மாலுமிகள் இருந்தனர்.

இந்நிலையில் அந்த கப்பல் பலத்த புயலால் கடந்த 2013-ம் ஆண்டு ஜூன் மாதம் மூழ்கியதில் பணியாற்றிய 4 இலங்கை மாலுமிகள் இறந்ததாக கூறப்பட்டது.

இதனையடுத்து, மீதமுள்ள இரண்டுபேரும் ஐரோப்பிய அதிகாரிகளால், நைரோபியில் உள்ள இலங்கை தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை தூதரகம் சர்வதேச இடம்பெயர்வு அமைப்புடன்(ஐ.ஓ. எம்) இணைந்து இவர்கள் இருவரும் நாடு திரும்ப உதவியுள்ளனர்.

இந்த நிலையில், பிஸ்தமி மற்றும் பெரெரா என்ற இரண்டு மாலுமிகளும் நேற்று பாதுகாப்பாக இலங்கை வந்து சேர்ந்தனர்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, மாலுமிகளை விடுதலை செய்ய உதவிய ஐரோப்பிய அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளது.(எ-11)

## ஜே.வி.பியின்...

நியமிக்கப்பட்ட சர்வதேச விசாரணைக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை எனவும், இது தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட உள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, மூன்று மாத காலப்பகுதிக்குள் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்து, அரசாங்கத்தின் யோசனைத் திட்டத்தில் சில திருத்தங்களை செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பியின் உத்தேச திருத்தங்கள் அடங்கிய யோசனைத் திட்டம் பாராளுமன்ற செயலாளர் தம்மிக்க திசாநாயக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக் குழுவை அனுமதி...

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பில் இலங்கை தொடர்பாக ஏற்கெனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணைக் குழு இலங்கைக்கு வந்து தனது விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான பயணமாக இவர்களின திர் விஜயம் அமைய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த வகையில் விசாரணைக்குழுவைஇலங்கைக்குள் அனுமதிக்கும்படி இலங்கை அரசாங்கத்தலைமையை வற்புறுத்துவதே இந்த இருவரினதும் பயணங்களின் பிரதான நோக்கம் என தகவல் வெளியாகி உள்ளன.

தனித்தனியான பயணங்களை மேற்கொண்டு அடுத்த வார முற்பகுதியில் கொழும்பு செல்லும் இருவரில் ஒருவர் ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் நாயகமான 57 வயதுடைய ஒஸ்கார் பெர்னாண்டஸ்டிரான்கோ எனதெரிவிக்கப்படுகிறது.

இவர் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ முனின் விசேட பிரதிநிதியாக வருகிறார்.

மற்றையவர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பிரிவில் பணியாற்றும் தெற்காசியாவுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் அதுல் கேசாப் என்பவர் என அறியப்பட்டுள்ளது.

இவர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் சார்பில் வரவுள்ள உயர் நிலை இராஜதந்திரியாகும்.

இவர்கள் இருவரும் இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஆளும் எதிர்க் கட்சிகளின் முக்கிய தலைவர்களையும் குறிப்பாக பிரதான தமிழ், முஸ்லிம் கட்சிகளின முக்கியஸ்தர்களையும் சந்தித்து பேச்சு நடத்த உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வகையில் எதிர்வரும் நாட்கள் இலங்கைக்கு மிகவும்சோதனைமிகுந்த நாட்களாக அமைய உள்ளதாக தெரிவிக்கும் உள்ளக மற்றும சர்வதேச ராஜதந்திரிகள் அயல் நாடான இந்தியாவின் மறைமுக அழுத்தங்களும இலங்கையை நோக்கி திரும்பியுள்ளதாக தெரிவிக்கின்றனர். (எ-11)

# இலங்கையூடாக சென்னை...

வேவு வேலைகளுக்காக இலங்கையரான ஹுசைன்(வயது 36) முகவராக அமர்த்தி, அவரை சென்னைக்கு பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. அமைப்பு அனுப்பியிருந்தமையையும் அவர் ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

அது மட்டுமல்லாமல், அவரது ஆபத்தான இந்தப் பணிக்கு இலங்கையில் இருந்தவாறு நிதி உதவி அளித்து, வழிகாட்டுதல்களை வழங்கி, அவரைக்கையாண்டவர் எனக் கூறப்படும் பாகிஸ்தான் இராஜதந்திரியின் பெயர் விபரங்கள், அடையாளங்கள் உட்பட மேலும் பல விடயங்களையும் அவர் புலனாய்வாளர்களிடம் தெரிவித்திருக்கின்றார் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

இலக்குகளைக்குறிவைப்பதில் தொடங்கி, திட்டமிடல், நிதியளித்தல் போன்றவை அனைத்தையும் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் அதிகாரிகளே கையாண்டனர் என்றும் ஹுசைன் தெரிவித்திருக்கின்றாராம்.

கொழும்பில்உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள், ஹுசைனுடன்தொடர்பு கொள்வதற்கு இலங்கை, மலேசியா மற்றும் மாலைதீவு நாடுகளின் ஒருடசினுக்கும் அதிகமான தொலைபேசி இலக்கங்களையும் பயன்படுத்தியிருக்கின்றமையும்விவரமாகத் தெரிய வந்திருக்கின்றது.

கொழும்பில்உள்ள இந்தியத் தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவரின் மடிக்கணினியை திருடி எடுத்துவர முயலும்படியும், அந்தத் தூதரகத்தில் பணியாற்றும் தொடர்புகள் மூலம் அத்தூதரகத்தின் மின் அஞ்சல தொடர்புகளை களவாகப்பெற்றுக்கொள்ள எத்தனிக் கும்படியும் 2013 ஜுலையில் ஹுசைன் பணிக்கப்பட்டிருந்தார்.

பாகிஸ்தான் பிரஜைகள் இந்தியாவுக்குள்களவாகப்பயணிப்பதற்காக அவரகளுக்குப் போலியாக இலங்கைக் கடவுச் சீட்டுக்களை தயார்படுத்திக் கொடுப்பது உட்பட பல மலைக்க வைக்கும் வேலைகளைத் தாம்செய்திருக்கின்றார் என்பதையும்ஹுசைன் ஒத்துக் கொண்டார் என எக்ன மிக்ஸ் ரைம் செய்தி தெரிவிக்கின்றது. (எ-11)

# புலிகள் மீதான தடை...

கையை மையமாக கொண்டு செயற்பட்டாலும் அதற்கு இந்தியாவில் அனுதாபிகளும், ஆதரவாளர்களும் உள்ளனர். இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒடுக்கப்பட்ட பிறகும், ஈழம் கோரிக்கையை வலியுறுத்தி அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் பல்வேறு இடங்களில் செயல்படுகின்றார்கள்.

அதன் தலைவர்கள் ஈழம் கோரிக்கைக்காக நிதி திரட்டுதல், பிரசார நடவடிக்கை மேற்கொள்ளுதல்ஆகிய செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

விடுதலை புலிகளுக்கு ஆதரவாக இந்தியாவில் சில குழுக்கள்செயல்பட்டன.

இதனால் அவற்றின் உறுப்பினர்கள் மீது சட்டவிரோத செயல்கள் தடுப்பு சட்டத்தின்கீழ், 2012, மே 14 ஆம் திகதி முதல் இந்தாண்டு ஏப்ரல் மாதம்வரை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

சிலர் மீது வெடிமருந்து சட்டங்களின் படியும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவும், ஈழம் கோரிக்கையை ஆதரித்தும் இணையதளம்மூலம வெளிநாடுகளில் வாழும் இலங்கை தமிழர்கள் சிலர் பிரசாரம் செய்து வருகின்றார்கள்.

இலங்கையில்விடுதலைப் புலிகளை வீழ்த்த இந்திய மத்திய அரசே காரணம் என்றும் அவர்கள் கூறிவருகிறார்கள், இதுபோன்ற பிரசாரங்களால் இந்தியாவில் உள்ள மிக முக்கிய பிரமுகர்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே பிரிவினையை தூண்டும்இதுபோன்றகுழுக்களை ஊக்குவிக்கும் விடுதலை புலிகள் இயக்கத்தை தொடர்ந்து சட்டவிரோத அமைப்பாக கருத மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அந்த இயக்கத்தினராலும், அதன் ஆதரவாளர்களாலும் இந்தியாவின் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நாட்டின் ஒற்றுமைக்கு பாதிப்பு நேரும் என்பதால் விடுதலை புலிகள் இயக்கத்தை தீவிவாத அமைப்பு என அறிவித்து அந்த இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (எ-11)

## இலங்...

யப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை, கம்போடியா, இந்தியா, கியூபா, சிம்பாப்வே போன்ற நாடுகளிலிருந்து இவ்வாறான முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒடுக்கப்படுவோர் தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கு குரல் கொடுகக சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையில் போராட்டங்களை நடத்துவோர் மீது திட்டமிட்ட வகையில் பல்வேறு வழிகளில் கண்காணிப்பு நடத்தி ஒடுக்குமுறைகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

## புலிகளி...

வும் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.


அதேநேரம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்கப் படாவிட்டால் அது அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதாக அமைந்து விடும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவுறுத்தியுள்ளது.

இவற்றின் மூலம் சர்வதேச விசாரணையில் இலங்கை மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரசாங்கம் வகை செய்ய முடியும் எனவும் ஐக்கிய தேசியக்கட்சி குறிப்பிட்டுள்ளதாக கொழும்பில்வெளியான செய்திகளில்கூறப பட்டுள்ளது. (எ-11)

மாணவர் விசாவில் பகுதிநேரமாக உழைக்கவும்
Work Permit இல் சென்று
பணம் சம்பாதிக்கவும்
ஹொட்டேல் தொழிற்துறை
கற்கைநெறி & வேலை

Option 1
6 மாத பயிற்சியுடன் மலேசியா / சிங்கப்பூரில் 4*/ 5* ஹொட்டேல் வேலைவாய்ப்பு

Option 2
1 வருடம் பகுதிநேர வேலைவாய்ப்புடனான பயிற்சியுடன் 2 வருட வேலைவாய்ப்பு



Option 3 : - UK, Switzerland, Australia, Malaysia New Zealand இல் வேலைவாய்ப்புடன் கூடிய மாணவர் விசா

கல்வித் தகைமை :- க.பொ.த சா/த
வயதெல்லை :- 18 - 25

100% எழுத்து மூலம் உத்தரவாதமான
Job Contract, Visa, Work Permit ஒழுங்குகள்

Sikaram TakeOff
மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk
077 36 16 798
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
(C-7648)

SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net
(C-7641)

One Day Training Programme
Isometric Drawings in Auto CAD
Commence on:15-06-2014 Sunday
Lecturer By: K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D-3D) Cert.in Advance 3D Modeling
University of Peradeniya University of Moratuwa
Architectural CAD Centre
Contact No:0718617972
(C-7652)

A/L பொருளியல்
MCQ
BOOK - 1
BOOK - 2
BOOK - 3
BOOK - 4
BOOK - 5
BOOK - 6
தரம் 12
தரம் 13
மற்றும் வினாவிடை நூல்கள் ஆசிரியர்: வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை
(6753)

கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் கீழக்காணும் வேலைவாய்ப்புக்கள்... உடனடியாக காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| HV AC Technician Helper | 900 + OT |
| Telecom Technician Helper | 900 + OT |
| Painter Helper | 900 + OT |
| Electrician Helper | 900 + OT |
| Plumper Helper | 900 + OT |
| Welding Helper | 900 + OT |

மற்றும் சுத்திகரிப்பாளர்கள், கையுதவியாளர்கள் போன்ற இன்னும் பல வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன

தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி, உணவு போன்றன இலவசம். கைவசம் விசா உள்ளதால் 2 வாரத்தில் பயணம். விண்ணப்பங்கள் எதிர்வரும் 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் ஏற்றுக் கொள்ளப்படும்

முக்கிய குறிப்பு:- நேர்முகத் தேர்விற்கு சமுகமளிப்பவர்கள் கடவுச்சீட்டு, 8 புகைப்படங்கள், சுய விபரக்கோவைகள் ஆகியவற்றை தவறாது கொண்டு வரவும்.

LL No.2248
AL/2248/ADVT10/14/11/15

உடன் தொடர்பு கொள்ள :-
Lanka Voice Hotline - 077 9527575 /076 6697789
கெப்பிடல் ரெக்ரூட்மன்ட் இன்டர்நெஷனல் (பி) லிமிடெட் இல.130/3/1, 3 மாடி, கிறேன்பாஸ் வீதி, கொழும்பு - 14
(C-7651)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org